உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 21 வெள்ளிக்கிழமை (04-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:129

# பேச்சின் அடுத்த கட்ட முன்னேற்றங்களுக்கு வழி உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதுதான்

## அயர்லாந்து குழுவினரிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



கிளிநொச்சி,ஏப்.4

புரிந்துணாவு உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தி ஏற்கனவே நடைபெற்ற பேச்சுக்களில் எட்டப்பட்ட உடன்பாடுகளை செயற்படுத்துவதன் மூலமே எதிர் காலத்தில் சமாதானமுயற்சிகளில் முன்னேற்றங்களைக் காணமுடியும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவரான வட அயர்லாந்தைச் சேர்ந்த ஜோன் கியூம் நேற்று கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்தார். அவருடன் கலந்துரையாடிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை 10.30மணியளவில ஹெலிமூலம் கிளிநொச்சி மத்திய பொது விளையாட்டு மைதானத்தில் வந்து இறங்கிய கியூம் தலைமையிலான குழுவினரை விடுதலைப் புலிகள வரவேற்றனர். காவல்துறையின் மரியாதையுடன் அவர்கள் நடுவப்பணியகத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர். அங்கு முற்பகல் 11மணிக்கு ஆரம்பமான கலந்துரையாடல் நண்பகல் 12.30 மணிவரை இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் சார்பில் தமிழ்ச்செல்வனுடன் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் கலந்துகொண்டார்.

ஜோன் கியூமுடன் இலங்கைக்கான பிரிட்டிஷ்தூதர் ஸ்ரீபன் இவன்ஸ், இந்தியாவுக்கான அயர்லாந்து தூதர் பிலிப் மைக்டொனோல்ட் மற்றும் பிரிட்டிஷ் அதிகாரிகளான ஜேம்ஸ் டியூரஸ், டிரஸ் பேடினன்ஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்தும் அதனை முன்னெடுப்பதில் உள்ள தடைகள், தாமதங்கள் பற்றியும் தமிழ்ச்செல்வன் எடுத்துக் கூறினார்.



கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தமிழ்ச்செல்வன் கூறியதாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதனைச் செயல்படுத்துவதன் மூலம் மக

(14 ஆம் பக்கம் பார்க்க)

# இப்போது சர்வஜன வாக்கெடுப்பா?

# அதனை புலிகள் அடியோடு நிராகரிப்பு!

## அரசின் ஒருதலைப்பட்ச முடிவை ஏற்க முடியாது என்கிறார் பாலா

லண்டன்,ஏப்ரல்4

**சமாதானத் தீர்வுத் திட்டம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகின்றது என அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த அறிவிப்புக் குறித்து விடுதலைப் புலிகள் ஆச்சரியமும், ஏமாற்றமும் தெரிவித்திருக்கிறார்கள்.**

**சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு இது நேரமல்ல என்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நேற்றிரவு 'உதயனு'க்குத் தெரிவித்தார்.**

சர்வஜன வாக்கெடுப்பு யோசனைகள் தொடர்பாக அரசுப் பேச்சாளர் ஜீஎல்பீரிஸ் நேற்று அறிவிப்பு ஒன்றை விடுத்திருந்தார். அது குறித்து அன்ரன் பாலசிங்கத்திடம் கருத்துக் கேட்ட போது அவர் கூறியதாவது:-

இந்த அறிவிப்பு எமக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும், ஏமாற்றத்தையும் தருகின்றது.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் யோசனை குறித்து முன்னர் ஒரு தடவை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் எம்மிடம் பிரஸ்தாபித்திருந்தார். அப்போதே அது சரிப்பட்டு வராது என்பதையும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான தீர்வுத்திட்டம் குறித்து 'மினி' சர்வஜன வாக்கெடுப்பு

### அரசு பரிசீலிப்பதாக அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு,ஏப்.04

அரசின் சமாதானத் தீர்வுத் திட்டம் தொடர்பாக 'மினி' சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படலாம். மதத்தலைவர்களும் பல்கலைக்கழக சமூகமும் இது குறித்து விடுத்துள்ள வேண்டுகோளை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றது என அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீஎல் பீரிஸ் கூறினார்.

நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பீரிஸ் இதனைக் கூறினார்.

தீர்வுத் திட்டம் தொடர்பாக நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முன் பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெறவேண்டும் என மதத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் தொடர்பாடல், உள்துறை அமைச்சுகளை ஜனாதிபதி கையேற்பாரா?

கொழும்பு,ஏப்.4

மக்கள் தொடர்பாடல் அமைச்சையும், உள்துறை அமைச்சையும் ஜனாதிபதி கையேற்பாரா?

அரசாங்க ஊடகங்களும் பொலீஸ் திணைக்களமும் செயற்படும் விதம் குறித்து திருப்தியடைய முடியாதென் பதால் அவ்விரு அமைச்சுகளையும ஜனாதிபதி கையேற்கவேண்டுமென்று அவரது சிரேஷ்ட ஆலோசகர்கள் ஆலோசனை வழங்கியிருக்கின்றனர் என்று ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

இவ்விரு அமைச்சுக்களையும் ஜனாதிபதி இம்மாதத்தில் கையேற்கவிருக்கிறார் என்று ஊடகங்களில் வெளியான செய்திகள் குறித்து வினவப்பட்டபொழுதே ஹரீம் பீரிஸ் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அரசாங்க ஊடகங்களும் பொலீஸ திணைக்களமும் ஜனநாயக ரீதியில் செயற்படுகின்றன என்பதை எடுத்துக் காட்ட முடியும் எனவும் அவர் கூறியிருக்கிறார். (ஐ)

## ஜி.சீ.ஈ.பரீட்சைப் பெறுபேறுகள் இன்று வெளியாகும்

கடந்த டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டப் பாடசாலைகளுக்குரிய பெறுபேறுகள் இன்று வழங்கப்படும் என்றும்-ஏனைய மாவட்டங்களுக்கான முடிவுகள் தபால் மூலம் அனுப்பப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

பரீட்சை முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் இன்று பார்வையிடலாம். (ஐ-3)

## 1,000 தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வழங்க இணக்கம்

கொழும்பு,ஏப்.4

வடக்கு - கிழக்கில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில நிரந்தர நியமனம் வழங்கப் பிரதமரும் கல்வி அமைச்சரும் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

பிரதமர், கல்வி அமைச்சர் ஆகியோருடன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனித்தனியாக நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, இரா.சம்பந்தன், ஐ.ஐ.கஜேந்திரகுமார், என்.ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம ஆகியோர் நேற்றுக்காலை பிரதமரை நாடாளுமன்றக் கட்டத்தில் சந்தித்துக

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பாலியல் குற்றங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

### விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

குடாநாட்டில் பாலியல் வல்லுறவுகள் மற்றும் விபசார நடவடிக்கைகள போன்ற சமூகச் சீரழிவுச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் நடவடிக்கையை எடுக்கவிருக்கின்றனர்.

அணமைக்காலமாக பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும், விபசார நடவடிக்கைகளும் அதிகரித்து வருகின்றன. அவற்றைத் தடுக்கவும், அச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கடும் தண்டனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

கிராம மட்டத்திலான குழுக்கள் அமைத்து மகளிர் அமைப்புகளுடன் கலந்துரையாடி இத்தகைய சமூக விரோதச் செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும் என்றும் -

இந்தச் செயல்களுக்கு எதிராக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கபபட்டுள்ளன என்றும் -

விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய செயல்களின் பின்னணியில் இருப்பவர்கள் இனங்காணப் பட்டுள்ளனர் என்றும் - அவர்களில் சிலர் தடுத்து வைக்கபபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## பக்தாத் நகரம் எந்த வேளையும் கூட்டுப் படைகள் வசம் வீழலாம்

பக்தாத்,ஏப்.4

ஈராக்கின் தலைநகர் பக்தாத் எந நேரத்திலும் அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப்படைகளின் கட்டுப்பாட்டின் கீழ வந்துவிடும் நிலையில் இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

பக்தாத்துக்கு 6 கிலோ மீற்றர் தூரத்தில் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள சதாமின் அரண்மனையும் சதாம் சர்வதேச விமான நிலையமும் அமெரிக்கக் கூட்டுப்படைகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

பக்தாத்தில் இருந்து 6 கிலோ மீற்றர் தூரத்தில் கடும் சண்டை நடைபெறுவதாகவும் - எந்நேரத்திலும் அமெரிக்கப்படைகள் பக்தாத்துக்குள் நுழையலாம் என்றும் - அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை - அமெரிக்காவின் இந்த அறிவிப்புகளை ஈராக் மறுத்துள்ளது.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்) (ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கண்மூடித்தனத்துக்கு பலத்த கண்டனம்

## அம்பாறை மாவட்ட தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் பெரும் பாதிப்பு

சாய்ந்தமருது,ஏப்.4

வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கண்மூடித்தனத்தாலும் அசமந்தத்தாலும் ஏனோதானோ மனப்பான்மையாலும் அம்பாறை மாவட்ட தமிழ் மொழிமூல (தமிழ், முஸ்லிம்) பாடசாலைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன என்று கவலையும் கண்டனமும் தெரிவிக்கப்படுகின்றன.

அம்பாறை நிர்வாக மாவட்டப் பாடசாலைகளுக்கெனச் செயற்பட்டு வரும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் தமிழ் மொழி மூலமான நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு கல்விப் பணிப்பாளர் தரத்தில் உள்ள ஒருவரைத் தமிழ் பேசும் இனத்தில் இருந்து நியமிக்க மாகாணக் கல்வி அமைச்சு தவறியதாலேயே இந்த அவலநிலை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த காலத்தில் இந்த அலுவலகத்தில் தமிழ் மொழி பேசும் மேலதிக கல்விப் பணிப்பாளர்கள் இருவர் கடமையாற்றி வந்தனர். அப்போது சிங்கள மொழி மூலமான பாடசாலைகளின் நலன்களைக் கவனிப்பதற்கு எனச் சிங்கள மொழி தெரிந்த கல்விப் பணிப்பாளர் ஒருவரை வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நியமித்தது.

அப்போது சிங்கள மொழிப் பாடசாலைகளுக்காக சிங்களம் தெரிந்த மேலதிக கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமித்த வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு இப்போது தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கெனத் தமிழ் தெரிந்த மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எவரும் இல்லாத நிலையில் ஒருவரை நியமிக்காமல் இருப்பது ஏன்? இது வெறும் அசமந்தமா, புறக்கணிப்பா அல்லது தமிழ் மொழி மூலக் கல்வி அபிவிருத்தியில் அக்கறையின்மையா என்றெல்லாம் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

தமிழ்மொழிமூலக் கல்வியையும் சிங்களமொழிமூலக் கல்வியையும் தனித்தனியே வளர்ப்பதற்கென்றே முறையே கல்முனைக் கல்வி மாவட்டம் எனவும் அம்பாறைக் கல்வி மாவட்டம் எனவும் அம்பாறை நிர்வாக மாவட்டம் பிரிக்கப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு பிரிவுகளிலும் 3 தமிழ் மொழிமூலமான கல்வி வலயங்களும் 13 தமிழ் மொழி மூலமான கோட்டக்கல்வி அலுவலகங்களும் 3 சிங்கள மொழி மூலமான கல்வி வலயங்களும் 8 சிங்கள மொழி மூலமான கோட்டக்கல்வி அலுவலகங்களும் செயற்பட்டுவருகின்றன.

இவை எல்லாவற்றிற்கும் பொறுப்பான மேலதிகாரியாக ஒரே ஒரு மேலதிகக் கல்விப் பணிப்பாளர்தான் இப்பொழுது இருக்கிறார். ஆனால், அவருக்கு சரியாகத் தமிழ்மொழி தெரியாது. அதனால் தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் சம்பந்தமான வேலைகளை அம்பாறையில் உள்ள மேலதிகக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் லிகிதர் தரத்தில் உள்ள ஒருவரே கவனித்து வருகிறார். தமிழ்மொழி மூல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான உத்தரவுகளையும் அந்த நபரே விடுத்து வருகிறார். அவர்களால் இதைச் சகிக்க முடியவில்லை.

மொத்தத்தில் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் மீது அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எல்லோருமே அதிருப்தி அடைந்து கொதித்துப் போயிருக்கிறார்கள். (ஐ)

# நாகப்பட்டினம் மீனவர்கள் மீது கடலில் துப்பாக்கிப் பிரயோகம்

கொழும்பு,ஏப்.4

தமிழ்நாடு, நாகப்பட்டினத்திலிருந்து மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதென செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் ஒரு மீனவர் காயமடைந்திருக்கிறார்.

சுமார் ஐந்து படகுகளில் வந்த இம்மீனவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருக்கையில் ரோறாப் படகு ஒன்றில வந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம மேற்கொண்டனர் எனக் கூறப்படுகிறது. துப்பாக்கிப் பிரயோகத்தில் சில படகுகளும் சேதமடைந்திருக்கின்றன.

இச்சம்பவம் குறித்து நாகப்பட்டினம் கரையோரக் காவல்துறையினரிடம் முறையிடப்பட்டிருக்கிறது. காவல்துறையினர் இதனை தமிழக அரசின் கவனத்துக்கு கொண்டுவந்திருக்கின்றனர். (ஐ)

# உயிர்ப்பலியெடுக்கும் பஸ்கள் கையேற்பு: சாரதி அனுமதிப்பத்திரம் நிரந்தர ரத்து!

## புதிய சட்டம் கொண்டுவர அரசு தீர்மானம்

பாதசாரிகளை மோதிக் கொல்லும் பஸ்களை கைபேற்கவும் அந்த பஸகளின சாரதிகளின் அனுமதிப் பத்திரங்களை நிரந்தரமாக ரத்துச்செய்யவும் வழிவகுக்கும் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

தனியார் பஸ்சேவையையும் நிருவாகம் தனியார் மயப்படுத்தப்பட்ட கொத்தணி நிறுவனங்களையும் சேர்ந்த பஸ்களுக்குப் பொருந்தக் கூடியதாக புதிய சட்டங்கள் உருவாக்கப்படும்.

பயணிகளுக்கென சேவையைச் சரிவர நிறைவேற்றாத தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் கொத்தணி பஸ் நிறுவனங்களுக்கும் எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடரவும் புதிய சட்டங்கள் வழிவகுக்கும்.

பொருளாதார ரீதியில் இலாபமற்ற மார்க்கங்களிலும் குறிப்பிட்டளவு பஸ்களை குறிப்பிட்ட நேரத்துக்கு சேவைக்கு விடுவது இச்சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்படும். (ஐ)

# சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் நிறுத்தம்!

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனக் கோரி யாழ்.நகரில் உள்ள மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் முன்பாக கடந்த இரு தினங்களாக மேற்கொண்ட மறியற்போராட்டம் நேற்றுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நோயாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தாம் இந்தப் போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளதாக யாழ. மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்கம அறிவித்துள்ளது. விரைவில் தமக்குச் சாதகமான பதில் கிடைக்காதுவிட்டால் மீண்டும் போராட்டத்தை தொடரப போவதாகவும் சங்கம் அறிவித்துள்ளது.

இரண்டாவது நாளாக நேற்றும் போராட்டம் இடம்பெற்ற போது அங்கு வருகை தந்த பணிப்பாளர் அலுவலகத்தின் பிரதம கணக்காளரும், உத்தியோகத்தர்கள் சிலரும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினா. போராட்டத்தைக் கைவிடும்படியும் கேட்டுக் கொண்டனர். தொண்டர்களின் கோரிக்கை தொடர்பாக பிரதிப் பணிப்பாளர் கொழும்பில் இருந்து வருகை தந்ததும் அவருடன் கலந்துரையாடுவதற்கு ஒழுங்கு செய்து தருவதாகவும் அவர்கள் உறுதி அளித்தனர். (ஐ-10-15-139)

## அரியாலை மத்தி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில மக்கள் மீளக்குடியமரவுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள புனரமைப்பு பணிகளுக்கென வடக்கு - கிழக்கு மாகாண சபை 42 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அரியாலை மத்தி, அரியாலை மத்தி தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள 50 கிணறுகள், 100 மலசலகூடங்கள் மற்றும் வீதிகள புனரமைப்புக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என்றும் -

புனரமைப்பு வேலைகளை உடன ஆரம்பிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-180)

## பிரதிவாதிகளுக்கு பிணை மறுப்பு

உடதலவின்ன படுகொலை வழக்கின் பிரதிவாதிகளுக்குப் பிணை வழங்க முடியாதென நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணையின்போது பிரதிவாதிகளுக்குப் பிணை வழங்குமாறு பிரதிவாதி தரப்புச் சட்டத்தரணிகள் வேண்டுகோள் விடுத்தனர். இது தொடர்பான தீர்ப்பை நீதிபதி சுனில் ராஜபக்ச நேற்று வழங்கினார். (ஐ)

## பயனாளிகள் சந்திப்பு ஒத்திவைப்பு

கோப்பாய்,ஏப்.4

கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங்குதல் தொடர்பாக நடைபெறவிருந்த கிராம அலுவலர் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

கையெழுத்துப் பெறுவதற்காக பயனாளிகள் நாளை சனிக்கிழமை கிராம அலுவலர் அலுவலகத்துக்கு வருகைதர வேண்டும் என்று முன்னா கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக மறுதிகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ஐ-72)

## பாதுகாவலர் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.4

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முக்கிய விடயங்கள்பற்றி இக்கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதால், அனைத்து சங்க உறுப்பினர்களையும் வருகைதருமாறு பாதுகாவலர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (ஐ-9)

# சமயசந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.4

நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், அன்றைய தினம் மாலை 5 மணிக்கு பெருந்துறையில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

உற்சவ தினங்களில் சைவசமயச சொற்பொழிவுகள் இடம்பெறும். (எ)

★ ★ ★

சண்டிலிப்பாய், ஏப்.4

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும 15 ஆம் திகதி இரதோற்சவமும் 16 ஆம திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (ஓ-135)

★ ★ ★

புலோலி மேற்கு வாணர் குடியிருப்பு சொக்கன்கலட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல்விழா இன்று வெள்ளிக்கிழமை இரவு ஆரமபமாகி நாளை சனிக்கிழமை நண்பகல் 12மணிக்கு விசேடபூசை நடைபெறும். (ஓ-170)

★ ★ ★

சண்டிலிப்பாய்,ஏப்.4

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீநாக பூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 16 ஆம திகதி இரதோற்சவமும் மறுநாள் 17 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. (ஓ-135)

★ ★ ★

வடமராட்சி, அல்வாய் மேற்கு தேவரையாளி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

எதிர்வரும் 7ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (எ-9)

★ ★ ★

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் திருவிழாக்கள் நடைபெறும். இப்பன்னிரண்டு நாள்களும் இந்து கலாசார அமைச்சின யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கத்தின் சமயச்சொற்பொழிவு இடம்பெறும். (ஓ-75)

★ ★ ★

துன்னாலை தெற்கு கரவெட்டி ஸ்ரீ பூதேஸ்வரர் ஆலயத்தின் மணவாளக்கோல விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று பூதேஸ்வரர் அம்பிகை சமேதரராய் இடபவாகனத்தில் வீதி வலம் வருவார்.

★ ★ ★

செம்பியன்பற்று,ஏப்.4

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 8மணி முதல் 1008 சங்குகளால் அபிஷேகம் நடைபெற்று அதனைத்தொடர்ந்து சண்முக அர்ச்சனையும் அதனைத்தொடர்ந்து முற்பகல் 11மணியளவில் முருகப்பெருமான வீதியுலா வரும் காட்சியும் இடம் பெறும். (36)

★ ★ ★

கொக்குவில்,ஏப்.4

தாவடி ஸ்ரீ அம்பலவாணர் வேத விநாயகர் கோயில் வருடாந்த மகோற்சவத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.4

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 15ஆம் திகதி காலை இரதோற்சவமும், மறுநாள் 16ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் (எ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.4

வண்வடமேற்கு, ஆனைக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தில இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு அம்மனுக்கு விசேட பூசை நடைபெறும். எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை கிராம ஊர்வலம் மற்றும் திருக்குளிர்த்தி நிகழ்வும் இடம் பெறும். (ு)

# கிளிநொச்சியில் இரு தினங்கள் இலவச மருத்துவ முகாம்

கிளிநொச்சி,ஏப்.4

வண்ணிப் பெருநிலப்பரப்பில் உள்ள மக்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக மருத்துவ முகாம் ஒன்று இன்றும் நாளையும் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

சுகாதார அமைச்சும் மாகாண சுகாதார அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த முகாமில் பல்துறை சார்ந்த வைத்திய நிபுணர்கள் பங்குபற்றுகின்றனர்.

சுகாதார அமைச்சின் பணிப்பாளரும் இந்த முகாமில் பங்குபற்றி நோயாளர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து செல்லும் வைத்திய நிபுணர்களும் இந்த முகாமில் கலந்து கொள்வர்.

சுகாதார அதிகாரிகளால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களுக்கே இந்த முகாமில் சிகிச்சை அளிக்கப்படும்.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. இராசநாயகம், பிரதி சுகாதாரப் பணிப்பாளர் எஸ்.சத்தியமூர்த்தி ஆகியோர் இந்த முகாமை நடத்துவர். (ஐ-3-139)

# இளைய தலைமுறையின் நடத்தையிலேயே இனம் ஒன்றின் எதிர்காலம் தங்கியுள்ளது!

## பரிசளிப்பு விழாவில் கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

குருநகர்,ஏப்.4

ஓர் இனத்தின் எதிர்காலம் இளம சமுதாயத்தினரின் நடத்தையிலேயே தங்கியுள்ளது.

யாழ்.சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.ஜீ.கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்புவிழா அண்மையில் வித்தியாலய அதிபர் எஸ்.தங்கராஜா தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்திலராக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஜீ.ஜீ கஜேந்திரகுமார் எம்.பி தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்களிடமோ அரசிடமோ பாடசாலைகளின் அபிவிருத்திக்கான நிதியைப் பெறுவதில் பாடசாலைகள் முன்நிற்கக்கூடாது. பழைய மாணவர்கள் தத்தம் பாடசாலைகளுக்கு உதவவேண்டியது கடமையாகும். கொழும்பில் வசிக்கும் பல தமிழர்கள் மிகவும் சொத்துடையவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் கல்வி கற்ற பழைய மாணவர்கள். இவர்கள் தாம் கல்வி கற்ற பாடசாலைகளுக்கு உதவி செய்யாமல் உள்ளார்கள். அவர்களது போக்கை மாணவர்களாகிய நீங்கள் பின்பற்றக் கூடாது.

நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எமக்கு அரசினரால் எமது மாவட்ட அபிவிருத்திக்கென வருடா வருடம் 50 லட்சம் ரூபா வழங்கப்படுகின்றது. இது யாழ். மாவட்டத்தில் உள்ள முழுத்தேர்தல் பகுதிகளுக்கும் பங்கிட்டு வழங்கப்போதாமலுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கிளிநொச்சியும் அடங்குகிறது. கிளிநொச்சியை நீங்கள் சென்று பார்த்தீர்களாயின் போரினால் யாழ்ப்பாணத்தை விட படுமோசமாக சேதமடைந்துள்ளதைக் காண்பீர்கள். முழுத்துக்கு முழும் சேதமடைந்த கட்டடங்களையே இங்கு நாம் காணலாம்.

எனவே, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் எமக்கென ஒதுக்கப்பட்ட இந்த 50 லட்சம் ரூபாவில் 10 லட்சம் ரூபாவை கிளிநொச்சியில் சேதமடைந்த கட்டடங்களைத் திருத்தியமைப்பதற்காக ஒதுக்கீடு செய்துள்ளோம்.

இன்று ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் சகலராலும் உணரப்பட்டு வருகிறது. ஆங்கிலம் ஒரு மொழி மட்டுமல்ல, அது இன்று ஓர் சர்வதேச மொழியாகவும் உள்ளது. சர்வதேச உடன்படிக்கைகள் யாவும் ஆங்கில மொழியிலேயே கைச்சாத்தாகின்றது.

எனவே, நாம் ஆங்கிலமொழியை அவசியம் கற்கவேண்டும். தமிழை நாம் சுத்தமாகப் பேசவேண்டும். உலகத்திலுள்ளவர்களுடன் நாம் தொடர்பு கொள்ள எமது இனத்தின் பிரச்சினையை எடுத்துக்கூற ஆங்கில மொழியை நாம் படிக்கவேண்டியது அவசியம் இதில் எமது பாடசாலைகள் அதிகம் அக்கறை செலுத்தவேண்டும் - என்றார். (எ-51)

# அமெரிக்க விமானத்தை சுட்டுவீழ்த்தியது ஈராக்!

வாஷிங்ரன்,ஏப்.4

பக்தாத் மீது தொடர்ச்சியாக குண்டுத் தாக்குதல் நடத்தி வந்த அமெரிக்க விமானங்களில் ஒன்றை ஈராக் சுட்டுவீழ்த்தியுள்ளது. புதன்கிழமை நள்ளிரவுக்கு சற்று முன்பாக இந்த விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதாக அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க விமானப் படையின் எவ்/ஏ-18சி(F/A-18C) ஹோர்நெற் ரக விமானமே ஈராக்கிய விமான எதிர்ப்பு ஏவுகணையால் சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளது. தனி ஒரு விமானியால் செலுத்தப்படும் இது சண்டையிடும் குண்டு வீச்சு விமானமாகும்.

தெற்கு ஈராக்கியப் பகுதியில் இந்த விமானம் எதிர்ப்பு ஏவுகணையால் சுட்டுவீழ்த்தப்பட்டதாக செய்தி நிறுவனங்கள் கூறுகின்றன. அதிலிருந்த விமானி என்ன ஆனார் என்பது தெரியவில்லை. அவரைத் தேடும் பணியில் தாம் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக நேற்று மாலை பென்ரகன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



எவ்/ஏ-18சி(F/A-18C) ரக விமானம்

யுஎஸ்எஸ் கிற்றி ஹவ்க் விமானந் தாங்கி கப்பலில் இருந்து புறப்பட்டுச் சென்ற விமானமே தளம் திரும்பவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர். ஆனால், விமானியின் பெயர் நேற்று மாலை வரை வெளியிடப்படவில்லை.

இந்த விமானம், எந்தக் காலநிலையிலும் செயற்படக்கூடியதாகவும், குண்டுத் தாக்குதல்களை நடத்துவதற்கும் எதிரி விமானங்களுடன் வானில் நேரடிச் சண்டையில் ஈடுபடும் வகையிலும் வடிவமைக்கப்பட்டது. இரட்டை இயந்திரங்கள் மூலம் இயங்கும் இதன் பெறுமதி 2 கோடி 90 லட்சம் டொலராகும்.

ஈராக்கில் அமெரிக்கா போரை ஆரம்பித்த பின்னர் சுட்டுவீழ்த்தப்பட்ட முதலாவது சண்டை விமானம் இதுவாகும். (ம)

# ஹெலியையும் வீழ்த்தி ஈராக்கியர் கைவரிசை!

பக்தாத்,ஏப்.4



'பிளக் ஹவ்க்' ரக ஹெலிகள்

ஈராக் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதலில் முக்கிய பங்காற்றி வரும் அமெரிக்காவின் 'பிளக் ஹவ்க்' ரக ஹெலி ஒன்று ஈராக்கியர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

ஹெலியில் இருந்த 11பேரில் குறைந்தது 7பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், எஞ்சியவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரிவிக்கப்படவில்லை.

சிறிய ரக ஆயுதங்களால் இந்த ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்புத் தலைமையக அதிகாரிகள் தெரிவித்தனர். பக்தாத்துக்கு தெற்கே சுமார் 50 மைல்கள் தொலைவில் உள்ள கர்பாலா என்ற இடத்தில் இந்தக் ஹெலி சுட்டுவீழ்த்தப்பட்டது. இந்த நகரத்தைத் தாக்கிய அமெரிக்கப் படைகள் அதனைக் கைப்பற்றிய ஒருநாளின் பின்னர், அப்பகுதியில் ஹெலி சுட்டுவீழ்த்தப்பட்டது. போரில் வீழ்த்தப்பட்ட மூன்றாவது அமெரிக்க ஹெலி இதுவாகும். ஹெலி சுடப்பட்டது குறித்து பென்ரகனும் கட்டாரில் உள்ள அமெரிக்கப் படைகளின் தலைமையகமும் வெளியிட்ட அறிக்கைகளில் முரண்பாடுகள் காணப்பட்டன.

ஹெலியில் 6பேர் மட்டுமே இருந்ததாகவும் அவர்கள் அனைவரும் உயிரிழந்துவிட்டனர் என்றும் பென்ரகன் தெரிவித்தது. அதற்கு மாறாக ஹெலியில் 11பேர் இருந்ததாகவும் அவர்களில் குறைந்தது 7பேர் உயிரிழந்திருக்கலாம் என்றும், எனினும் இழப்புக்கள் குறித்த தெளிவான தகவல்கள் இல்லை என்றும் கட்டார் தலைமையக அறிக்கை தெரிவித்தது. (ம)

# பக்தாத்தின் விளிம்பில் அமெரிக்கப் படையினர்!

வாஷிங்ரன்,ஏப்ரல்4

**அமெரிக்காவின் 3ஆவது கவச வாகனப் படைப்பிரிவு பக்தாத்தை நெருங்கிவிட்டது. தலைநகரின் எல்லையில் இருந்து 6 கிலோ மீற்றர் தூரத்தில் படைகள் தற்போது நிலைகொண்டுள்ளதாக வாஷிங்ரனில் அதிகாரிகள் தெரிவித்தனர். பக்தாத்துக்கு காவலாக கர்பாலாவுக்கு அருகே நிலை கொண்டிருந்த ஈராக்கிய குடியரசுப் படைகளின் இரண்டு டிவிஷன்களைத் தாக்கி நிர்மூலமாக்கி உள்ளதாகவும் படைத் தளபதிகள் கூறினர்.**

**தொடர்ந்தும் அங்கு கடும் சண்டை இடம்பெற்று வருகின்றது. பக்தாத்தின் எல்லைவரை முன்னேறிவிட்ட அமெரிக்கப் படைகள், நகர விமான நிலையத்தைக் கைப்பற்ற முயன்று வருவதாக நேற்று மாலையில் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.**

குறுகிய இடைவெளியின் பின்னர் மீண்டும் தமது தரை நகர்வைத் தீவிரமாக்கிய அமெரிக்கப் படையினர், பக்தாத்துக்கு தெற்கே 50 மைல்கள் தொலைவில் உள்ள கர்பால நகரை முதலில் கைப்பற்றினர். அங்கு ஈராக்கியப் படையினரிடம் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. ஒரே இரவுக்குள் அமெரிக்கப் படைகள் அந்த நகரைக் கடந்தன. தொடர்ந்து பக்தாத் நோக்கி முன்னேறின.

பக்தாத்தின் சதாம் சர்வதேச விமான நிலையப் பகுதியில் இருந்து வெகு சில மைல்கள் தொலைவு வரை அமெரிக்கப் படையினர் முன்னேறி இருக்கின்றனர். இங்கிருந்து நகரைக் கைப்பற்றுவதற்கான கடைசித் தாக்குதல் தொடங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. "கூட்டுப் படைகள் தற்போது பக்தாத் விமான நிலையத்தின் வெளியே நிலைகொண்டுள்ளன. இங்கிருந்து எப்போது சண்டையை ஆரம்பிப்பது என்பது இப்போது எங்கள் கையில் இருக்கின்றது" - என்று கட்டாரில் உள்ள அமெரிக்காவின் படைத் தலைமையக அதிகாரியான கப்டன் பிராங் தோர்ப் தெரிவித்தார்.

மத்திய பக்தாத்தில் இருந்து 12 மைல்கள் தென்மேற்கில் உள்ளது சதாம் சர்வதேச விமான நிலையம். பக்தாத்துக்குள் நுழையும் அமெரிக்கப் படைகளைத் தடுத்து நிறுத்தப் போராடும் ஈராக்கிய குடியரசுப் படைகளின் நிலைகள் மீது மத்திய பக்தாத்தைக் கடந்து சென்று அமெரிக்க விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருவதாக பக்தாத்தில் உள்ள செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். அந்த விமானங்கள் மீது ஈராக்கியப் படையினர் விமான எதிர்ப்பு ஏவுகணைகளால் தாக்குதல் நடத்திவருவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

பக்தாத் எல்லைவரை முன்னேறி விட்ட அமெரிக்கப் படைகளை தடுத்து நிறுத்த குடியரசுப் படையினரின் நான்கு டிவிஷன்கள் தெற்கு நோக்கி நகர்வதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர். ஆனால், அவை எந்த இடத்திலும் அமெரிக்கப் படைகளுடன் நேரடியாகச் சண்டையிடவில்லை என்றும் தெரிவித்தனர். (ம)



பக்தாத்துக்கு வெளியே நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலின்போது....



அமெரிக்கப் படையினரால் கைப்பற்றப்பட்ட நகர் ஒன்றில் அமைக்கப்பட்டுள்ள சோதனை நிலையத்தில் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ள ஈராக்கியப் பெண்களை சிப்பாய் ஒருவர் ஒழுங்குபடுத்துவதைப் படத்தில் காணலாம். இதேசமயம், ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவுக்குள் நுழைய முடியாமல் திணறும் பிரிட்டிஷ் படைகள் நேற்று கிளாஸ்டர் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.

# பி.பி.ஸி. வீடியோப் பிடிப்பாளர் நிலக்கண்ணியில் சிக்கிப் பலி!

## வட ஈராக்கில் சம்பவம்

லண்டன்,ஏப்.4

ஈராக்கில் போர் தொடர்பான செய்திகளை சேகரித்துக் கொண்டிருந்த லண்டன் பி.பி.ஸியின் வீடியோப் படப் பிடிப்பாளரான ஹவ்க் கோல்ஸ்டன் வடஈராக்கியப் பகுதியில் நிலக்கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்தார்.



அச்சமயம் அவருடன் இருந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஸ்ருவர்ட் ஹுக்ஸ் இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தார். ஆனால், செய்தியாளர் ஜிம் முயர் மற்றும் உள்ளூர் மொழி பெயர்ப்பாளர் ஆகியோர் தெய்வாதீனமாக காயம் ஏதுமின்றி தப்பிவிட்டனர்.

அவர்களது வாகனம் கிவ்ரி என்ற நகரை அண்மித்துக்கொண்டிருந்த சமயம் நிலக்கண்ணியில் சிக்கியது.

உயிரிழந்த ஹவ்க் கோல்ஸ்டன், புகைப்படப் பிடித்தல் தொழிலில் மிக உயர்வாக மதிக்கப்படும் 'புலிட்ஸர்' விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பி.பி.ஸிக்காக கடந்த பல ஆண்டுகளாக அவர் பணியாற்றி வருகின்றார். (ம)



**ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் உருவச் சிலை ஒன்றை தகர்த்த அமெரிக்க படையினர் அதன் தலைப் பாகத்தை கிரேன் ஒன்றில் கட்டி அப்புறப்படுத்த எடுத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.**

# ஆயுத வியாபாரத்துக்கு செலவின்றி விளம்பரம் தேடவே ஈராக் யுத்தம்!

## அமெரிக்கத் தாக்குதலை எதிர்கொள்ள சதாம் வகுத்த வியூகம்

மறுபடியும் வளைகுடாப்போர்! அமெரிக்கா இந்த முறையும் உல குக்கு அடையாளம் காட்டும் வில்லன், அதே சதாம் ஹுசைன். இலக்கு மறு படியும் ஈராக் தலைநகர் பக்தாத் நகரம்!

"உலகம் முழுக்க சக்கை போடு போடும் தனது ஆயுத வியாபாரத்துக்கு பணச்செலவில்லாத விளம்பரமாகவே இந்த யுத்தத்தைக் கருதுகிறது அமெ ரிக்கா" என்கிறார்கள் உலக ரீதியிலான அரசியல் தலைவர்கள்.

"ஸ்வீட் கடைவைத்தால், தின்ப தற்கு சாம்பிள் கொடுக்கலாம்.. துணிக் கடை வைத்தால், மாடல்களை விட்டு அதை அணியச்செய்து விளம்பரப் படுத்தலாம். ஆனால், ஆயுதங்கள் எத்தனை வீரியமானவை என்பதை வெடித்துக்காட்டி அல்லவா புரிய வைக்க முடியும்? அதைத்தான் அமெ ரிக்கா, ஈராக்கில் செய்து கொண்டிருக் கிறது" என்கிறார்கள் இவர்கள்.

கடந்த வளைகுடாப் போருக்கும் இதற்கும் வித்தியாசம்... கடந்தமுறை சதாம், குவைத்தை அத்துமீறி ஆக்கிர மித்தபோது, அமெரிக்கா 'குவைத்தை மீட்பதற்காக' என்று சொல்லி நேசநா டுப் படைகளையும் திரட்டிக்கொண்டு யுத்தம் தொடங்கியது. உலக நாடுகள் பலவும் அதன் பின்னால் நின்றன.

இந்தமுறை 'சதாமை அவரது நாட்டில் இருந்து வெளியேற்றி, அந் நாட்டு மக்களுக்கு சுதந்திரம் தர' என்று சொல்லி குண்டு போட ஆரம் பித்திருக்கிறது அமெரிக்கா. இதில் ஒப்புதல் இல்லாதவர்கள் அதிகம். அதனால், அமெரிக்க ஆதரவு விட யத்தில் உலகமே பிளவுபட்டு நிற் கிறது. குறைந்தபட்சம் ஐரோப்பிய நாடுகளின் முழு ஆதரவைக்கூட அமெரிக்காவால் பெறமுடியவில்லை.

"ஐக்கிய நாடுகள் சபை சொல் வதே எங்களுக்குத் துச்சம்" என்று சொல்லி, ஐ.நாவின் பொதுச் செய லாளர் கோபிஅனானைக் குழப்பி யடித்து விட்டு யுத்தம் துவங்கியிருக் கிறார்கள். இதில் ஐ.நாவுக்கு வர லாறு காணாத அவமானம்!

அமெரிக்க அதிபர் ஜோர்ச்புஷ், "நாட்டை விட்டுக் குடும்பத்தோடு, உற வினர்களோடு வெளியேறுக" என்று சதாமுக்கு வைத்த கெடு ஈராக் நேரப் படி வியாழன் அதிகாலை நான்கு மணிக்கு முடிவடைந்தது. ஆனால், அதற்கு முன்பே ஈராக் புஷ்ஷின் யோசனையை நிராகரித்து விட்டது!

அந்தச் சமயத்தில்கூட போர் உடனே துவங்கும் என்று உலகில் யாருமே நினைத்துப் பார்க்கவில்லை. ஐரோப்பிய நாடுகளெல்லாம் சேர்ந்து சமாதானம் செய்துவைத்துவிடும் என்றுதான் எதிர்பார்ப்பு இருந்தது. பஹ்ரைன் நாடு சதாமுக்கு அடைக் கலம் தர முன்வந்தது. சதாமே கூட ஆரம்பகட்டத்தில் ஈராக்கை விட்டு வெளியேறுவது குறித்துப் பரிசீ லனை செய்தார். தன் இரண்டாவது மகன் குசாய் ஹுசைனை ஈராக் அதிபர் ஆக்கிவிட்டு அரசியலில் இருந்து ஓய்வுபெற நினைத்தார். ஆனால், சதாமோடு சேர்த்து அவரது மகன்கள் குசாய் ஹுசைன் மற்றும் உதய் ஹுசைனும் வெளியேற வேண் டும் என்று அமெரிக்க அதிபர் வலி யுறுத்தியது சதாமின் கோபத்தை ஜுவாலையாக்கி விட்டது.

### மணல் புயலின் சவால்

கெடு முடிந்து பக்தாத் நகரின் மீது ஏவுகணைகள் வந்து விழுந்து நெருப்புக்கோளங்கள் கிளம்பிக் கொண்டிருக்கும் இந்த நிலையிலும் குவைத் எல்லையில் காத்துக் கிடக் கும் அமெரிக்கத் தரைப்படையினரால் ஈராக்கினுள் நுழைய முடியாத நிலை. அவர்கள் காத்து நிற்கும் பாலை வனத்தில் வீசிக்கொண்டிருக்கும் மணல்புயல் வேறு பெரும் சவால்!

துருக்கி எல்லையில் காத்திருக் கும் இன்னொரு திரளான படைகளுக் கான உபகரணங்கள் இன்னமும் முழு மையாகப் போய்ச்சேரவில்லை. இருக் கும் படைவீரர் எண்ணிக்கை போதாது என்று அமெரிக்கா எதிர் பார்க்கிற மாதிரி ஈராக் இராணுவமும் பொது மக்களும் சதாமுக்கு எதிராக றோட் டில் இறங்கி கலகம் செய்யலாம். அமெரிக்கப்படைகள் தங்களைக் காப்பாற்ற வந்தவர்கள்தான் என்று கருதி வரவேற்கலாம். அதற்கேற்ப உளவு அமைப்பான சி.ஐ.ஏ. அங்கே ஊடுருவி தங்களுக்கென்று விசுவாசி களை உருவாக்கி வைத்திருக்கின் றது.

இப்படி நடந்தால் ஈராக்கில் அதிக சேதாரம் இன்றி ஆட்சி மாற்றம் நிகழ்ந்துவிடும். அமெரிக்காவின் தாக்கு தலுக்கு உலகம் முழுதும் எழுந் துள்ள எதிர்ப்புகளும் அடங்கிவிடும். ஈராக் படையில் நான்கு லட்சத்து அறுபதாயிரம் பேர் இருக் கிறார்கள். ஆனால், இவர்களில் முறையான பயிற்சிபெற்ற போர் வீரர்கள் மிக மிகக் குறைவு! அதனால், தங்களின தாக்குதலை எதிர்கொள்ள முடியா மல் வீழ்ந்து விடுவார்கள் என நம்புகிறார் புஷ்.

படைத்தலைவர் சதாமைப் புறக் கணித்துவிட்டு ஓடிவிடுவது ஒன்றும் புதிதல்ல. கடந்த பத்து வருடங்களில் இப்படிக் கிட்டத்தட்ட நாற்பது தளபதி கள் நிம்மதியான வாழ்க்கையைத் தேடி ஈராக்கை விட்டு ஓடியிருக்கிறார் கள். இவர்களில் சதாமின் மருமகன் கள் இருவர் கூட அடக்கம்.

இரண்டாவது முடிவு - ஒருவேளை ஈராக் இராணுவம் ஓரளவு எதிர்ப்புக் காட்டிப் போரிட்டால் பல நாள்கள் போர் நீடிக்கும். அதேசமயம் சதாம், அல்-ஹெய்டா அமைப்புக்கள் தங்க ளுக்குள்ள நெருக்கத்தைப் பயன் படுத்தி அமெரிக்காவின் முக்கிய நக ரங்கள் மீது உயிரியல் ஆயுதங்கள் மற்றும் இரசாயன ஆயுதங்களை ஏவிவிட்டு சரமாரியான மரணங் களுக்கு வழிவகுக்கக்கூடும். அதை விட அமெரிக்காவின் அன்புக்குரிய நாடானா இஸ்ரேல் மீதுதான் ஈராக் இம்மாதிரி உயிரியல் தாக்குதல் நடத்தும் என்று கணிக்கிறார்கள் போர் வல்லுநர்கள்.

### அந்திரக்ஸ் கிருமிகள்

இஸ்ரேல் வரை ஏவிவிடுவதற் கான சக்திவாய்ந்த ஏவுகணைகள் ஈராக் வசம் இல்லை. எனவே, தங் களிடம் இருக்கும் இராணுவப்பயிற்சி ஜெற் விமானங்களில் கொடிய 'அந்திரக்ஸ்' கிருமிகளை நிரப்பி இஸ்ரேல் எல்லைக்குள் தற்கொலைப் படையாகப் புகுந்து அந்நாட்டுக்குள் அந்திரக்ஸைத் தூவ ஈராக் முயலக் கூடும் என்று அமெரிக்காவிடம் ரிப்போர்ட் இருக்கிறது.

அப்படி எதுவும் நடந்தால் அமெ ரிக்கா மீது உலக நாடுகள் பலவும் காட்டிவரும் போர் எதிர்ப்பு உணர்வு மறைந்துவிடும். போர்த் தாமதத்தை மீறி இப்படிப் படுகொலைகள் இஸ்ரே லிலோ, அமெரிக்காவிலோ நடந்தால் உலகின் அனுதாபம் அமெரிக்கா மீது திரும்பும்.

இப்போது எதிர்க்கும் பல நாடுகள் கூட அமெரிக்காவுக்கு ஆதரவாக ஈராக் மீது தாக்குதலில் இறங்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மூன்றாவது கோணத்திலிருந்து பார்த்தால்.. ஈராக் இராணுவம் கடுமை யான எதிர்ப்புக்காட்டி, அமெரிக்கா முன்னேறுவதைத் தடுத்து நிறுத்தக் கூடும். அப்படிச் செய்தால் இந்த நேரடி யுத்தத்தில் அமெரிக்க இராணு வத்தினர் பலர் சாகநேரிடும். இதனால், அமெரிக்கா எரிச்சலாகி சரமாரியான விமானத்தாக்குதலை நடத்தி, அப்பாவி ஈராக் பொதுமக்கள் பலரை சாகடிக்கும்.

அப்போது சதாம் அசாத்திய பொறுமைகாட்டி மரபுரீதியான போரையே நடத்துவார். அல்ஹெய்டா வினரோ, சதாமின நிழல் ஆதரவுப் படையோ அமெரிக்க நகரம் எதன் மீதும் அவசரப்பட்டு தாக்குதல நடத்தி விடாமல் பொறுமையாக இருந்து உலகின் அனுதாபத்தை மேலும் கூட்டிக்கொள்ளக்கூடும்.

இப்படி நடந்தால் போர் பல மாதங் கள் நீடிக்கும். இதனால், உலகநாடு கள் எல்லாவற்றின் பொருளாதார நிலைமையும் பாதிக்கப்படும். உலகம் முழுக்க இருக்கும் எல்லா நாடுகளுக் கும் ஏதோ ஒரு முடிவெடுத்து யார் பக்கமாவது நிற்க வேண்டிய கட்டா யம் ஏற்படும். இப்போது அமெரிக்கா வின் வல்லமையை எல்லோரும் ஏற்று அடங்கியிருப்பது மாறி உலகம் இரண்டு அணிகளாப் பிளவுபடும்.

-இது அமெரிக்காவுக்கு நல்ல தல்ல.

### பலமான போர் எதிர்ப்பு

அத்தோடு.... அமெரிக்காவின் போர் எதிர்ப்பு பலமாகிவிடும். வியட் நாம் போர் சமயத்தில் நடந்தது மாதிரி 'நமக்கு சம்பந்தம் இல்லாத போரில் நம்நாட்டு வீரர்கள் ஏன் சாக வேண்டும்?' - என்று கேட்டு மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்த

(09ஆம் பக்கம் பார்க்க)



# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையாளர்கள் சுயவிவரம், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரவும்.

நேர்காணல் நடைபெறும் இடம் :- ஆயப்பகுதி - நடுவப் பணியகம், கிளிநொச்சி.

காலம் :- 12.04.2003, மு.ப 10.00 மணி.

பணிநிலை :-

01. ஆய அலுவலர் (இருபாலாரும்)
02. ஆய உதவியாளர் (ஆண்கள்)
03. எழுதுநர் (ஆண்கள்)
04. தட்டெழுத்தாளர் (ஆண்கள்)
05. சமையலாளர் (ஆண்கள்)
06. சமையல் உதவியாளர் (ஆண்கள்)
07. பாதுகாப்புப் பணியாளர் (ஆண்கள்)
08. மொழிபெயர்ப்பாளர் (ஆண்கள்)

## கல்வித்தகைமை

பணிநிலை 01, 03 இற்கு க.பொ.த. [உ/த] சித்தியடைந்திருத்தல்.

பணிநிலை 02 இற்கு க.பொ.த. [சா/த] கற்றிருத்தல்.

பணிநிலை 04, இற்கு க.பொ.த. [சா/த] சித்தியடைந்திருப்பதோடு, தட்டச்சுச் சான்றிதழும் பெற்றிருத்தல்.

பணிநிலை 05 இற்கு உணவு வகைகளைத் தயாரிப்பதில் முன்னனுபவம் பெற்றிருத்தல்.

பணிநிலை 06 இற்கு 08 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல்.

பணிநிலை 07 இற்கு தேகாரோக்கியமும் நன்நடத்தையும் உடைய பணியில் அனுபவமுடையவர் விரும்பத்தக்கது.

பணிநிலை 08 இற்கு தமிழ், ஆங்கிலம், சிங்களத்தில் சரளமாக உரையாடக் கூடியவர். எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

*சிறப்புச்சலுகை :– கவர்ச்சிகரமான ஊதியத்துடன் உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதி செய்து தரப்படும்.*

ஆயம்,
நிதித்துறை,தமிழீழம்.

(சி27098)

உதயன்

# பொறுப்போடு செயற்படுக!

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம்களின் விவசாயக் காணிகளை மீளக் கையளிப்பதற்கு புலிகள் முன்வந்துள்ளனர். அதற்காக புலிகளுக்கு நன்றி தெரிவித்திருக்கின்றார்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் அமைச்சர் பஷீர் சேகுதாவூத்தும்.

முஸ்லிம்கள் எதுவித தங்கு தடைகளுமின்றி - கடந்த காலங்களைப் போன்று - சுதந்திரமாக தமது காணிகளுக்குச் சென்றுவரவும் பழைய சூழ்நிலையை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையே படிப்படியாக ஏற்பட்டு வருகின்ற புரிந்துணர்வை இன்னும் வளர்த்தெடுக்கவேண்டும். இவற்றுக்கு புலிகள் எங்களோடு சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும் என்று அமைச்சர் ஹக்கீம் கோரிக்கையும் விடுத்திருக்கின்றார்.

கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நல்லுறவைப் பேணச் செய்வதில் புலிகளின் தலைவர்களும் முஸ்லிம்களின் தலைமைத்துவமும் இப்போது காட்டிவரும் சிரத்தை வரவேற்புக்குரியது. இன சௌஜன்யத்துக்கு நல்லதோர் அறிகுறி அது.

அமைச்சர் ஹக்கீமுக்கும் விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுவுக்கும் இடையில் கடந்தமாதம் மூன்றாம் வாரத்தில் ஜப்பானின் ஹக்கோனி நகரில் இடம்பெற்ற சந்திப்புக்களின் பின்னர் கிழக்கில் நல்லுறவை வளர்க்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதை அவதானிக்கமுடிகின்றது. இந்த நல்லுறவை மேலும் உறுதிப்படுத்தும் விதத்தில் தங்கள் பகிரங்க உரைகளிலும் செயற்பாட்டிலும் இருதரப்புத் தலைவர்களும் மிகுந்த பொறுப்புணர்வை வெளிப்படுத்துவதும் அவதானிக்கப்படக்கூடியதாக உள்ளது.

எனினும், ஹக்கோனியில் புலிகளின் பிரதிநிதிகள - ஹக்கீம் சந்திப்புக் குறித்து புலிகளின் பேச்சுக் குழுத் த்லைவர் அன்ரன் பாலசிங்கம் வெளியிட்ட தகவல்களை அடுத்து, கிழக்கு முஸ்லிம்களின் மற்றொரு பகுதித் தலைவர்கள் வெளியிட்டு வரும் சில கருத்துக்கள் வேறுவிதமாக அமைந்திருக்கின்றன.

அதனால், இருதரப்பு நல்லுறவைப் பேணி வளர்ப் பதில் கஷ்டங்கள் ஏற்படலாம் என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

சூடாக இருந்தாலும், மறுபுறத்தில் நேரடிச் சந்தப்புக்கள் மூலம் உறவை வலுப்படுத்தவும் கருதது வேறுபாடுகளைக் களையவும் விருப்பம் காணப்படுவதும் தெளிவாகப் புலனாகின்றது.

லண்டனில் புலிகளின் பேச்சுக்குழுத் தலைவரும் ~~மதியுரைஞருமான~~ அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேசுவதற்கு வடக்கு - கிழக்கு முஸ்லிம் எம்.பிக்களின் ஒன்றியம் எடுத்துள்ள முயற்சி இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

தாய்லாந்தில் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும் அரசு - புலிகள் ஏழாவது சுற்றுப்பேச்சுக்கு முன்னர் இந்தச் சந்திப்பை மேற்கொள்ள முஸ்லிம்களின் எம்.பிக்கள் ஒன்றியம் விரும்புகின்றது.

சந்திப்புக்கு புலிகள் இணங்குவார்களா?, சந்திபு உடனடியாக சாத்தியப்படுமா? என்பது தெரியவில்லை.

என்றாலும், புலிகளின் மூத்த தலைவர்களைச் சந்தத்துப் பேசி, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு முஸ்லிம் எம்.பிக்கள் எடுத்துள்ள முயற்சி வரவேற்கத்தக்கதே. ஆனாலும், அத்தகைய சந்திப்புக்கும், அந்த சந்திப்பின்போது புரிந்துணர்வுடன் கூடிய கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் அக்கலந்துரையாடல்களில் காணப்பட்ட இணககமான பெறுபேறுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் வாய்ப்பான சூழ்நிலை பேணப்படவேண்டும்.

அதற்குத் திருக்குறளைத் தந்த வள்ளுவப் பெருந்தகை இருசாராருக்கும் வழி சொல்கிறார்-

"யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

எனவே, கலந்துரையாடல், கருத்தொற்றுமை, அமைதி வழியில், இணக்கத்தீர்வு ஆகியவற்றில் ஈடுபாடுகாட்டும் தலைவர்கள், அதற்கு வாய்ப்பான சூழ்நிலையைப் பேணும் விதத்தில் தங்கள் உரைகளை - அறிவிப்புக்களை - செயற்பாடுகளை - நடவடிக்கைகளை எல்லாம் பொறுப்போடு மேற்கொள்ளவேண்டும் என்பதை மறந்துவிடக்கூடாது.

# யாழ்ப்பாணத்துக்கு விரைவில் மேலும் பஸ்கள் அனுப்பப்படும்

## மத்திய .போக்குவரத்துச் சபைத் தலைவர் தெரிவிப்பு

செம்பியன்பற்று,ஏப்.4

யாழ்ப்பாணத்துக்கு புனரமைக்கப்பட்ட ஒரு தொகுதி பஸ்கள் விரைவில் அனுப்பப்படவுள்ளன. இங்குள்ள பிரயாணிகளின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் வகையில் இந்த பஸ்கள் வழங்கப்படவுள்ளன.

- இவ்வாறு தெரிவித்தார் மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் பாருக். பருத்தித்துறை டிப்போவுக்கு வந்திருந்த அவர், டிப்போ முகாமையாளர் எஸ்.கமலநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் பேசினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இன்றைய சமாதான நிலையில் மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நிரந்தர சமாதானம் ஏற்படும்போது மக்களின் போக்குவரத்து வசதிகள் மேலும் சிறப்படையும். இதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதற்கு புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சின் உதவிகளும் கிடைக்கும்.

போக்குவரத்து சபை ஊழியர்களும் உத்தியோகத்தர்களும் பிரயாணிகளுக்கு சிறந்த போக்குவரத்துச் சேவைகளை வழங்க பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

ஊழியர்கள் சேவை மனப்பான்மையுடன் கடமையாற்றும் போதுதான் பிரயாணிகள் சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணத்திற்கு வெகுவிரைவில் புனரமைக்கப்பட்ட பஸ்கள் அனுப்பப்படவுள்ளன. இதில் பருத்தித்துறை ப்ஸ் டிப்போவிற்கும் பஸ்கள் வழங்கப்படும்.

சாரதிகள், நடத்துநர்கள் பற்றாக்குறையை நீக்க 40 சாரதிகளும் 40 நடத்துநர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான இருவார கால பயிற்சி முடிவடைந்ததும் அவர்களும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அப்போது உங்கள் பற்றாக்குறை நீக்கும் என்றார்.

பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் எஸ்.கமலநாதன் பேசும்போது கூறியதாவது:-

பருத்தித்துறை பஸ் டிப்போவில் சாரதிகள், நடத்துநர்கள் பற்றாக்குறையினால் நாள் ஒன்றுக்கு 30ஆயிரம் ரூபா வருமானத்தை இழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு போதிய பஸ்சேவைகளை நடத்தமுடியாமல் இருக்கிறது. 16 சாரதிகளும் 18 காப்பாளர்களும் உடனடியாக தேவைப்படுகிறது. டிப்போவில் இருக்கும் 36 பஸ்களில் 25 பஸ்கள் ஓடும் நிலையில் உள்ளன. புதிதாக 5 பஸ்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றன. இங்கு பஸ்களின் உதிரிப்பாகங்கள் பற்றாக்குறையும் நிலவுகின்றது என்று கூறினார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் எஸ்.மணிவாசகம், டிப்போ பொறியியலாளர் எஸ்.கனகலிங்கம், தொழிற்சங்கத் தலைவர் எஸ்.அருமைதுரை ஆகியோர் உரையாற்றினர். (ம-36)

# உதவிப்பணம் பெறுவோருக்கு நெடுந்தீவில் கடன் வசதிகள்

நெடுந்தீவில் வசிக்கும் பொதுசன உதவிப்பணம் பெறுவோருக்கு பணம்பெறும் அட்டை மற்றும் அவர்களுக்கான ஊக்குவிப்புக்கடன் வசதி முதலானவை வழங்கப்பட்டு வருவதாக நெடுந்தீவு சமூக சேவைகள் உத்தியோகத்தர் சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவுப் பகுதியில், நீண்டகாலமாக உதவிப்பணம் பெறுவோர் கடதாசித்துண்டில் பதியப்பட்ட அத்தாட்சி மூலமே பணம் பெற்று வந்தனர். இதனால் பல சிரமங்களை அவர்கள் எதிர்நோக்கினர். இதனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கென உதவிப்பணம் பெறும் அட்டை ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு, உதவிப்பணம் பெறும் வறிய குடும்ப அங்கத்தவர்கள் மேற்கொள்ளும் தொழில் முயற்சிகளுக்கு உதவும் முகமாக ஊக்குவிப்புப் பணமும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் சண்முகலிங்கம் தெரிவித்தார். (ம-12)

# கத்தரிக்காய் அமோக விளைச்சல் சந்தையில் அதன் விலை வீழ்ச்சி

பல ஆண்டுகளின் பின் இம்முறை யாழ்.மாவட்டத்தில் கத்தரிக்காய்ச் செய்கையில் அமோக விளைச்சல் கிடைத்துள்ளது. இதனால், சந்தையில் அதன் விலை பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல சந்தைகளிலுமே ஒரு கிலோ கத்தரிக்காயின் விலை இருபது ரூபாவிற்கும் குறைவாகவே உள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ கத்தரிக்காய் பத்து ரூபாயிலிருந்து 15ரூபாவிற்கு விற்கப்படுகின்றது.

1993,1994ஆம் ஆண்டுகளின் பின்னர் இம்முறையே கத்தரிக்காய் மிகவும் அதிக விளைச்சலைத் தந்துள்ளதாகவும்-

கத்தரிக்காயின் அமோக விளைச்சலுக்கு இந்தக் காலப் பகுதியில் பனித்தாக்கம் குறைவாக இருந்ததே காரணம் எனவும் - யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-12)

# வலிகாமப் பாடசாலைகளில் முறைசாராக் கற்கை நெறிகள்

## வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள முறைசாராக் கல்வி கற்கைநெறிகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சங்கானைக் கோட்டத்துக்குட்பட்ட சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கணனிக் கற்கையும், வட்டு. இந்துக் கல்லூரியில் உடையமைத்தல் கற்கையும், சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயத்தில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்துக் கற்கைகளும் -

சண்டிலிப்பாய்க் கோட்டத்துக்குட்பட்ட புனித ஹென்றியரசர் கலலூரியில் ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து கற்கையும், சென். ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலையில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து கற்கையும், ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையில் கடல்வளம் கற்கையும் -

உடுவில் கோட்டத்துக்குட்பட்ட இணுவில் மத்திய கல்லூரியில் வீட்டு மின் இணைப்புக் கற்கையும், இராமநாதன் கல்லூரியில் மனை முகாமைத்துவக் கற்கையும், உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் உடையமைத்தல் கற்கையும் -

தெல்லிப்பழைக் கோட்டத்தில் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் தமிழ்த் தட்டெழுத்து, சுருக்கெழுத்துக் கற்கையும், மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தில் கடல்வளக் கற்கையும், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் உடையமைத்தல் கற்கையும், அருணோதயக் கல்லூரியில் சிகை அலங்காரமும் ஒப்பனையும் கற்கையும் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் நடத்தப்படவுள்ளன என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

# யுத்தவடுக்கள் நிறைந்த மண்ணில் கலைகள் பேணப்பட வேண்டும்

## ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் தெரிவிப்பு

ஊர்காவற்றுறை,ஏப்.4

யுத்தவடுக்கள் நிறைந்த மண்ணில் கலை, கலாசாரங்கள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் - இவ்வாறு தெரிவித்தார் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் பா.சுப்பிரமணியம்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதிவான் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்டகாலமாக நடைபெற்று முடிந்துள்ள யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஊர்காவற்றுறை பிரதேசம் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. யுத்த அபாயம் குறைந்ததைத் தொடர்ந்து பெருமளவு மக்களும் இந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

எனவே. யுத்த சூழலால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழும் மக்கள் மத்தியில் அமைதிச் சூழலையும், பொழுதுபோக்குச் சூழலையும் மீண்டும் உருவாக்கவேண்டும். இதற்கு முதற்கட்டமாக இப்பகுதி மக்களுக்கே உரித்தான கிராமியமட்ட விளையாட்டுக்களும், கலை, கலாசாரங்களும் மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு போதிய பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். மிகவும் திறமையான முறையில் சாதனை படைத்த இந்தப் பிரதேச வீரர்கள் மாவட்ட, தேசிய மட்டங்களில் சாதனை படைக்கவேண்டும் - என்றார்.

தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் தமது உரையில்:-

தமிழீழ தேசிய விளை யாட்டு ஒருங்கிணைப்புப் பேரவையின ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட அணி விரைவில் லண்டனுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளது. அங்கு நடைபெறும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் இந்த அணி பங்குபற்றும்.

அண்மையில் தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் தமிழீழ பெருவிளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

இதில் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விளையாட்டு வீர வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தார்கள். அதில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட விளையாட்டு அணி வெற்றி பெற்றிருந்தது.

இந்த அணி விரைவில் லண்டனுக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அங்கு வெற்றி பெறும் பட்சத்தில் ஏனைய நாடுகளுக்கு அழைத்துச்செல்லப்படும். அதேவேளை: எதிர்காலத்தில் நடத்தப்படும் தமிழீழ தேசிய விளையாட்டுப் போட்டிகளில் இங்கிருந்தும் வீரர்கள் உற்சாகத்துடன் பங்குபற்றி தமது திறமைகளை வெளிக்கொணர வேண்டும் - என்று கூறினார்.

ஊாகாவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தமது உரையில்:-

ஊர்காவற்றுறையில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கிய பின்னர் 1998ஆம் ஆண்டு முதல் இந்த விளையாட்டுப் போட்டிகள வருடாந்தம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

பல விளையாட்டுக் கழகங்களில் அங்கத்தவர் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றபோதிலும் அந்த விளையாட்டுக் கழக வீரர்கள் பெரும் ஆர்வத்துடன் இந்தப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தமை வரவேற்கத்தக்கதாகும்.

விளையாட்டுக் கழகங்கள் தமது நிர்வாகங்களை சிறந்த முறையில் புனரமைப்புச் செய்வதன் மூலம், கழக வீரர்களுக்கு நல்ல வசதி வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக அவர்களது திறமைகளை வெளிக்கொணர வழி செய்யமுடியும். (எ-16)

**நாளை**

பங்குனி 22
சனிக்கிழமை
(05.04.2003)
திதி: திருதியை
காலை 7.18 வரை
நட்சத்திரம: பரணி
காலை 6.34 வரை
கார்த்திகை விரதம்,
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 3.09 - 4.39
ராகுகாலம் : 9.09 - 10.39
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

தான் வாழ்வதற்கே உலகம என்று எண்ணுவார்கள். உலகம் வாழ்வதற்கும் உதவ முனைய வேண்டும்.

# ஆளற்ற வீட்டின் கதவுகளை கழற்றிய இருவர் பிடிபட்டனர்!

வரணி,ஏப்.4

ஆள்கள் இல்லாத வீட்டில் கதவுகளை இரவு நேரம் கழற்றிக் கொண்டிருந்த இருவர் படையினரிடம் பிடிபட்டனர். வரணி இடைக்குறிச்சியில் இருவாரங்களுக்கு முன்னர் இச்சம்பவம் இடம்பெற்றது.

வரணி தென்னிந்தியத் திருச்சபைத தேவாலயத்துக்கு அண்மையில் இருந்த வீட்டின் கதவுகளை இரவு நேரம் இருவர் கழற்றிக் கொண்டிருந்ததாகவும் -


அச்சத்தம் கேட்டு, வீட்டுக்கு அணமையில் பாதுகாப்பு அரணில் இருந்த படையினர் அங்கு சென்று அவர்களைப் பிடித்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

பிடிக்கப்பட்ட இருவரும் வீட்டு உரிமையாளரின் உறவினர் ஒருவரால் அடையாளம் காணப்பட்டனர். பிடிபட்ட இருவரும் கொடிகாமம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர் தற்சமயம் இடம்பெயர்ந்து இந்தியாவில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-170)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 22 - 02 - 1983 | 28 - 03 - 2001 |

அமரர்

**மார்க்கண்டு நகுலேஸ்வரன் (ரகு)**

திதி: 04.04.2003

ஒட்டி இருந்தோம் - இன்று
நீ மட்டும் ஒழிந்து விட்டாய்
வீட்டில் சிரித்து விளையாடினோம் - இன்று
நீ மட்டும் சிரிப்பிழந்தது ஏன்?

கூடிப் பறந்தோம் - இன்று
நீ மட்டும் சிறகுடைந்து விட்டாய்
அழுது துடிக்கின்றோம் எமையாற்ற - நீ
இல்லையே ரகு!
நாடித்துடிக்கின்றோம் - இனி
உன்னை நாம் எப்போ காண்பது ரகு?

"ஆவளை"
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய். (16227)

உன்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 - 08 - 1921 | 05 - 03 - 2003 |

**அமரர் அப்பாக்குட்டி தாமோதரம்பிள்ளை**

நாள்கள் முப்பத்தொன்று ஆனதையா
உன் நினைவுகள் என்றும் உள்ளதையா
நீசென்ற இடம் தான் தனிமையோ
கூற்றவன் அழைத்த இடமதுவோ?
அன்பான வார்த்தை இன்மலர் முகம்
தேடிப் பார்க்கின்றோம் கிடைக்கவில்லை
என்றும் உங்கள் பாதை தொடர்வோம்
என்றும் உங்கள் நினைவில் இருப்போம்.

05.03.2003 அன்று எங்கள் அன்புத் தந்தையின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட அயலவர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கும் மற்றும் நேரடியாகவும், தபால், தந்தி, துண்டுப் பிரசுரம் மூலமும் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கிராஞ்சி லேன்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (16262)

பரமநாதன் குடும்பம்
(சுவிஸ்)

# அடையாள அட்டை பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள்

தென்மராட்சி,ஏப்.4

குடாநாட்டில் தேசிய அடையாள அட்டை இல்லாதோருக்கு அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுக்க பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதுவரை தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள், அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள்,அடையாள அட்டையில் புகைப்படம் சிதைந்தும், எழுத்துக்கள் தெளிவில்லாத நிலையில் உள்ளவர்கள், திருமணத்தின் பின்னர் பெயர மாற்றம் செய்யப்படவேண்டியவர்கள், தொழில் விபரம் பதிவுசெய்யவேண்டியவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலர்களிடம் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

# சீருடை முத்திரைகளை உடன் பெறுமாறு அறிவுறுத்து

தென்மராட்சி,ஏப்.4

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களில் பெரும்பாலானோர் இதுவரை தமது சீருடைத் துணிக்கான முத்திரைகளை கிராம அலுவலரிடம் பெற்றுக்கொள்ளவில்லை எனக் கூறப்பட்டது.

சீருடைத்துணிக்கு அதிபர் ஊடாக விண்ணப்பித்து இதுவரை, சீருடை முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் நாளை சனிக்கிழமைக்கு முன்னர் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பெற்றுக்கொள்ளுமாறும் -

தவறின்,எதிர்வரும் 8 ஆம், 10 ஆம், 11ஆம் திகதி பிரதேச செயலகத்தில் வைத்து முத்திரைகள் வழங்கப்படும் என்றும் -

அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சீருடைத் துணிக்கு விண்ணப்பிக்காத மாணவர்கள் உரிய படிவத்தினைப் பூர்த்திசெய்து பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறும் -

அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

# சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.4

கடந்த மாதம் 31ஆம் திகதி பருத்தித்துறைக் கடற்பிராந்தியத்தில் மிதந்ததாகத் தெரிவித்து வல்வெட்டித்துறைப் பொலீஸாரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இனம் தெரியாத சடலம் உறவினரால் இனம் காணப்பட்டுள்ளது.

கடந்த மாதம் முல்லைத்தீவுக் கடலில் தாக்கி அழிக்கப்பட்ட சீன மீன்பிடி வள்ளத்தில் பணிபுரிந்தவர்களில் ஒருவரான காலியைச் சேர்ந்த கேமாங்கொட தர்மக பிரியதர்சன் (வயது 21) என்பவருடையதே இந்தச் சடலமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

காலியில் இருந்து யாழ்ப்பாணம் வந்த அவரது உறவினரே சடலத்தை இனம் காட்டி, பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை பொறுப்பேற்று அவரது சொந்த ஊரான காலிக்கு நேற்று முன்தினம் எடுத்துச்சென்றார்.

சீன மீன்பிடி வள்ளத்தில் இறந்தவர்களில் இவருடன் 8 பேரின் சடலங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (எ-15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06 - 04 - 1925 | 05 - 03 - 2003 |

**அமரர் வெள்ளையன் கந்தையா**

எமைமறந்து ஐயா நீ எங்கேதான் போனாயோ?
நினைவிழந்து துடிக்கின்றோம் மீண்டுவர மாட்டாயா?
மாதம் ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டானாலும்
உம்நினைவு எம்மனதில் என்றென்றும் நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை வேண்டுகிறோம்.

கொட்டியன் சீமா
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (C-27077)

- குடும்பத்தினர்.


# கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

## வெற்றிடங்கள்

**கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**

தகைமைகள் :

1. க.பொ.த. (சாதாரணம்) சித்தி
2. உயரம் 5'4" குறையாமல் இருத்தல் வேண்டும்.
3. மார்பு 32" குறையாமல் இருத்தல் வேண்டும்.
4. நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
(ஓய்வுபெற்ற பொலீஸ் / படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
5. வயதெல்லை - 23 வயதிற்கு மேல்

நேர்முகப்பரீட்சை :

**05.04.2003 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பின்வரும் ஆவணங்களுடன் நேரில் வரவும்.**

1. கிராம அதிகாரியின் நற்சான்றுப் பத்திரம் (6 மாதங்களுக்கு உட்பட்டது)
2. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
3. தே.அ.அ. போட்டோப் பிரதி
4. வி.அ.அ. போட்டோப் பிரதி
5. கல்விச் சான்றிதழ்

43,கல்லூரி வீதி,
(யாழ்.இந்து மைதானம் முன்பாக)
யாழ்ப்பாணம். (C-27092)

- பணிப்பாளர்.


உ

## உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் பங்குனித் திங்கள் 24ஆம் நாள் (07.04.2003) திங்கட்கிழமை பஞ்சமித் திதியும், ரோகிணி நட்சத்திரமும், அமிர்த யோகமும் கூடிய சுபதினத்தில் மு.ப.10 மணி 31 நிமிஷம் முதல் 11 மணி 30 நிமிஷம் வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில்

கொக்குவில்
நந்தாவில் அம்மன் கோவில்
பிரதமகுரு சிவஸ்ரீ முத்துக்குமாரசாமிக் குருக்கள்
ஜெகதீஸ்வரி அம்மா தம்பதிகளின்

கோண்டாவில் உப்புமடம்
ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவில்
பிரதமகுரு
சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள்
பத்மாவதி அம்மா தம்பதிகளின்

பௌத்திரனும்

**எமது ஏகபுத்திரனுமாகிய சிரஞ்சீவி கௌரிநாத சர்மா**

அவர்களுக்கு

சௌள உபநயன பிரம்மோபதேசம் செய்ய கற்புலத்து மனோன்மணி அம்பாளின் திருவருள் கூடியிருப்பதால், எமது இல்லத்தில் நடைபெறும் மேற்படி முகூர்த்தத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து புத்திரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரம்மோபதேசக்குரு :- "சிவஞான பாஸ்கரன்" சிவஸ்ரீ தா.மஹாதேவக்குருக்கள்
(தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்)

தங்கள் நல்வரவை நாடும்:


பிரம்மஸ்ரீ
சு. வாசுதேவசர்மா
ஹேமலதா தம்பதிகள்
(16258)

"ஜெயகௌரி வாசம"
இல.101, லக்சபானா வீதி,
தோணிக்கல், வவுனியா.
T.P: 024 20464, 0777 498654

சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக் குருக்கள் (J.P.)
(அகில இலங்கை சமாதான நீதிவான்)
ஜெயகௌரி தம்பதிகள்
(நந்தாவில்)

# அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் நாட்டில் முன்னேற்றம்

## வர்த்தகத்தில் இடம்பிடித்த பொறியியலாளர் குலேந்திரராஜா



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் குலேந்திரராஜாவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர் மொழிபெயர்ப்பாளர் குணரத்னம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல்.தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல்-நேருக்குநேர் நிகழ்ச்சியில் கடந்த முதலாம் திகதி தோன்றி தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் ராஜா குறூப் அதிபர் குலேந்திரராஜா.

சிவில் பொறியியலாளராக அரசாங்க சேவையில் பணியாற்றி வாழ்க்கையை ஆரம்பித்தவர் குலேந்திரராஜா. தற்போது அவர் நகை வியாபாரம், புகைப்படத்துறை, உணவகம் என பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ளார். மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட குலேந்திரராஜாவுக்கு கனடாவின் ரொரன்டோ நகரத்தில பிரபல்யமான உணவகம் ஒன்று இருக்கிறது.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசக்கூடிய குலேந்திரராஜாவின் மனைவி சிங்களப் பெண்மணியாவார்.

அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே நாடு அபிவிருத்தி அடையும் என்கிறார் குலேந்திரராஜா.

ரீஎன்.எல். தொலைக்காட்சியில தொழில் அதிபர் குலேந்திரராஜாவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:-* பல்வேறு துறைகளில் நீங்கள் ஈடுபட்டிருக்கின்றீர்கள். இதுவரை நீங்கள் கடந்துவந்த பாதையைப் பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:-* நான் ஆரம்பத்தில் ஒரு பொறியியலாளராக அரச துறையில் இருந்தேன். அத்துறையில் மேலும் முன்னேற வேண்டும் என்று நினைத்தேன். அந்த அடிப்படையில் ஆறு மாதங்கள் இத்தாலியில் பயிற்சி பெற்றேன்.

பின்னர் பயிற்சிபெற்ற அந்நிறுவனத்தின் வேலைகளுக்காக வேறு நாடுகளுக்குச் சென்றேன்.

நாளாக நாளாக முன்னேற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டேன். 1980களில் எனது வியாபாரத்தை ஆரம்பித்தேன். பின்னர் 1990களில் ஏற்பட்ட பிரச்சினைகளால் கொழும்புக்கு வரநேர்ந்தது.

கனடாவிலும் நியூசிலாந்திலும் பிரஜா உரிமைபெற்ற எனது சகோதரர்களின் உதவி எனக்குக் கிடைத்தது. அதனால் கனடாவிலும் உணவகம் ஒன்றை நடத்தி வருகிறேன். அதன் பின்னர் கொழும்பில் நகைக் கடை ஒன்றை ஆரம்பித்தேன். தங்க நகை ஏற்றுமதி, இறக்குமதிகளில் ஈடுபட்டு வருகிறேன். அப்போது ஜப்பானில் இடம்பெற்ற கண்காட்சி ஒன்றிற்குச் சென்றேன். எனது வியாபாரத்தை எவ்வாறு விருத்தி செய்யலாம் என்பதை அங்கு கண்டறிந்து கொண்டேன்.

உலகத்தில் பல துறைகளுக்கும் மாற்றீடுகள் வந்துவிட்டன. ஆனால், புகைப்படக்கலைக்கு மட்டும் மாற்றீடு வரவில்லை என்பதை அந்தக் கண்காட்சியில் உணர்ந்துகொண்டேன். வீடியோப் படப்பிடிப்பும் அந்தளவிற்கு முக்கியத்துவம் பெறவில்லை. ஆனால், புகைப்படக் கலையோ அபிவிருத்தி அடைந்துவிட்டது.

*கேள்வி:-* மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட நீங்கள் சரளமாக சிங்களம் பேசுகின்றீர்கள்?

*பதில்:-* பல்கலைக்கழகத்தில் நான் படிக்கும்போது எனது நண்பர்கள் பலர் சிங்கள இனத்தவர்களாக இருந்தனர். அத்துடன் எனது மனைவியும் ஒரு சிங்களப் பெண் தான்.

*கேள்வி:-* நீங்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளீர்கள். இருவேறுபட்ட பின்னணியில் வர்த்தக விடயங்கள் தொடர்பாக நீங்கள் கண்ட வேறுபாடுகள் எவை?

*பதில்:-* இலங்கையில் ஒருவரில் மற்றவர் தங்கிவாழும் நிலைமை இருக்கிறது. ஆனால், வெளிநாடுகளில் அப்படி அல்ல. அவர்கள் தனி மனிதர்களாக வாழ்கிறார்கள்.

*கேள்வி:-* அந்த வாழ்க்கைமுறை உங்கள் வியாபாரத்தில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியது.

*பதில்:-* நிறைய வேறுபாடுகள் உள்ளன. அங்கு பலவிதமான வசதிகள் உள்ளன. எமது வியாபாரம் தொடர்பான விவரங்களை நாங்களே இணையத்தில் பார்த்துக் கொள்ளலாம்.

*கேள்வி:-* இத்தகைய நவீன முறைகளை எவ்வாறு இலங்கையில் அறிமுகப்படுத்தலாம் என்று நினைக்கிறீர்கள்?

*பதில்:-* அது ஒன்றும் பெரிய வேலை அல்ல. ஆனால், எமது நாட்டில் உள்ளவர்களுக்கு அதில் அக்கறை இல்லை. எல்லாம் அரசியல் மயமாகிவிட்டது. அத்துடன் வகுப்புவாதமும் அதிகமாகவே இருக்கிறது.

*கேள்வி:-* அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

*பதில்:-* ஒருவரில் ஒருவர் தங்கியிருக்காமல் முன்னேற வேண்டும். கடந்த காலங்களில் நாட்டில் பயங்கரவாதப் பிரச்சினை இருந்தது. இப்போது ஒரு வருடமாக அந்தப் பிரச்சினை இல்லை. ஆனால், உடனடியாக நாம் இயல்பு நிலையை எதிர்பார்க்க முடியாது. அப்படியானால் இலங்கையைச் சிங்கப்பூராக்கலாம். வெளிநாடுகளில் வாழும் அனைத்து இலங்கையர்களும் மீண்டும் நாடு திரும்பவே விரும்புகின்றனர். இலங்கை போன்ற வளமுள்ள நாடு வேறெங்கும் இல்லை.

*கேள்வி:-* நீங்கள் பல வியாபாரத்துறைகளில் ஈடுபட்டுள்ளீர்கள். நாட்டில் சமத்துவம் பேணப்பட வேண்டும் என்பதில் வர்த்தக சமூகத்திற்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?

*பதில்:-* அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் முக்கிய பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். அப்போது நாடு அபிவிருத்தி அடையும்.

- இவ்வாறு கூறினார் குலேந்திரராஜா



நெதர்லாந்தைச் சேர்ந்த 'எவிடன்ட்' நிறுவனத்தின் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து மல்லாகத்தில் கண் சிகிச்சை முகாம் நடத்தியபோது எடுக்கப்பட்ட படம். (ஓ-86)

# தென்மராட்சிப் பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை

## நலச் சேவைச் சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.4

தென்மராட்சிப் பிரதேசத்தில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை நிலவும் 6 பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.

ஆஸ்திரேலியாவில் இயங்கும் தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன், தென்மராட்சி மக்கள நலச சேவைகள் சங்கத்தின் ஊடாக இந்த வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.

கைதடி - நாவற்குழி அ.த.க. பாடசாலை,கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம், மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்,மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், அல்லாரை அ.த.க.பாடசாலை, மந்துவில் றோ.க.த.கபாடசாலை ஆகிய பாடசாலைகளே இவ்வாறு குடிதண்ணீர் வசதிகளைப் பெறவுள்ளன.

கிணறு உள்ள பாடசாலைகளின கிணறுகள் துப்புரவு செய்யப்பட்டு நீர பம்பிகள் மூலம் பெறப்படும் நீர் பிளாஸ்ரிக் தண்ணீர்த்தாங்கிகள் மூலம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் -

கிணறு வசதிகளற்ற பாடசாலைகளில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

(எ)

# சுயசிந்தனை, அறிவுவிருத்தி என்பன மன அடக்கத்தினால் கிடைப்பன

இலங்கை சின்மயா மிஷனும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலும் இணைந்து கடந்த மாதம் 14ஆம் திகதி முதல் 5 தினங்கள் ஆன்மீக முகாம் ஒன்றினை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நடத்தின.

ஆன்மீகம் தொடர்பான தேடலுடன் சென்ற இளைஞர்களுக்கு இம்முகாம் சிறந்த பலன்களைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

எத்தனையோ நூல்களை வாசித்துப் பெறவேண்டிய ஆழமான ஆன்மீகக் கருத்துக்கள் அங்கே இளைஞர் மனங்களில் விதைக்கப்பட்டன. ஆரோக்கியமான சமூகத்தின் ஸ்திரத்தன்மைக்கு ஆன்மீகக் கருத்துக்கள் அவசியம் என்பதனை இம் முகாம் மூலமாக அறியமுடிந்தது.

**தர்ப்பனா சிறிமகாதேவன்**

சுவாமிஜி ரமண சைதன்யா அவர்களின் தலைமையின் கீழ் முகாம் வழிநடத்தப்பட்டது. இளைஞர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதோடு நின்றுவிடாது "உன்னால் முடியும்.... நம்பு" என்ற ஞானத்தையும் கொடுக்கவேண்டும் என்பதே இம்முகாமின் நோக்கம். சுவாமிஜீ ஆழ்ந்த வாழ்க்கைத் தத்துவங்களைத் தெளிவாக, இளைஞர்கள் புரிந்துகொள்ளும்படி எடுத்துக் கூறினார். ஆன்மீகம் என்பது இறைவனின் பிரேமையையும், அருளையும் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தின் பாற்பட்டவை.

இளைஞர்களிடம் தன்னம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் அவர்களின் பேச்சிலும், பார்வையிலும், நடையிலும் ஒரு வித கம்பீரம் ஒளியிட்டு நிற்பதைக் காணலாம். மனோவலிமையுடன் இளைஞர்கள் தயாராக இருந்தால் எத்தனை இடையூறுகள் வந்தாலும் அவர்கள் கொள்கைகளை அசைக்க முடியாது.

'துள்ளி வருகுது வேல் தூர நில் பகையே' எனப் பாரதி பாடியது போல் இளைஞர்களும் வீறுகொண்டு எழுந்துவிடுவார்கள். எந்தக் கருத்துக்களையும் ஆழ்ந்து யோசிப்பவர்கள் இளைஞர்கள். அதைப் பற்றி இன்னும் தெரிந்துகொள்ளும் அவாவை அவர்கள் பெருக்கிக்கொள்ளும் போது, அதுவே அவர்களை வெற்றிப் பாதைக்கு அழைத்துச்செல்கிறது.

சுய சிந்தனையும், தூய்மையான உள்ளமும், நல்ல உணர்வுகளும் இளைஞர் மனங்களிலே தோன்ற வேண்டுமானால் ஆன்மீகக் கருத்துக்கள் அவர்களுக்கு வழங்கப்படவேண்டும். இளைஞர்கள் மனதில் ஆன்மீக உணர்வுகள் தோன்றினால் அச்சம் அகலும்; தைரியம் பரிமளிக்கும்; வீரம் எழும். இதனையே விவேகானந்தர்

'நீ எண்ணித் துணிந்தபின் - உன்னை

உலகம் முழுவதும் வாளெடுத்து எதிர்த்து நின்றாலும்

கொண்ட கருமத்தைக் கைவிடாதே"

என்கிறார்.

ஆன்மீகத்தின் மூலம் புத்திக் கூர்மையுள்ள அன்பைத்தேடும் இளைஞர்களால்தான் அன்பின் இயல்பையும், நிரந்தரமான அன்பைப் பெறும் வழிமுறைகளையும் உணர்ந்து வாழ்வில் உயர்வடைய முடியும். ஆன்மீகத்தால் இணையும் இதயங்களில் ஒளிரும் அன்பு சுயநலத்தையும், மமதையையும் அழித்து ஒளிமயமான வாழ்விற்கு வித்திடுகிறது. 'பேச்சு மூச்சற்ற பேரின்ப வெள்ளமுற்று நீச்சு நிலை காணாமல் நிற்கும் நாள் எந்நாளோ' எனத் தாயுமானவர் வேண்டுகின்ற பேரின்ப நிலையை ஆன்மீகத்தின் மூலம் அடையலாம் என்பதை இந்த ஆன்மீக முகாம் இளைஞர்களுக்கு தெட்டத்தெளிவாக உணர்த்தியது என்றால் அது மிகையாகாது.

இளைஞர்களுக்கான ஆன்மீக முகாமிலே இடம்பெற்ற தியானம், பயன்சத்சங்கம், சொற்பொழிவுகள் மற்றும் ஆன்மீகம் தொடர்பான கருத்துக்கள் யாவும் பங்குபற்றிய இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இம்முகாமில் கொழும்பு சின்மய யுவகேந்திரா சார்பில் கலந்துகொண்ட ஜயாத்துரை கஜமுகன் வழங்கிய நாடகக்கலை பற்றிய விளக்கங்களும் சோ.சசிகுமாரசர்மா வழங்கிய வேதாகமக் கருத்துக்களும் மற்றும் பவானி அம்மா, திருமதி சந்திரசேகரன் ஆகியோர் வழங்கிய கருத்துக்களும் மிகவும் பயனுள்ளவையாக அமைந்தன.

## ஞானக்கதிர்

யாழ்மண்ணில் இத்தகையதோர் ஆன்மீக முகாம் இடம்பெற்றிருப்பது இதுவே முதற்றடவை. சமாதானத் தென்றல் நம்மைத் தீண்டிக் கொண்டிருக்கும் வேளையில் இந்த ஆன்மீக முகாம் இடம்பெற்றுள்ளமை வரவேற்கத்தக்கது. மூடநம்பிக்கைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு ஆன்மீகத்தின் மூலம் அர்த்தம் மிக்க வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இளைஞர்கள் முன்வரவேண்டும். மேலும், அதுபோன்ற ஆன்மீக முகாம்கள் தொடர்ந்தும் யாழ் மண்ணில் இடம்பெறவேண்டும். கொந்தளிக்கும் இதயங்களுக்கு ஆன்மீகம் குளிர் நிழல் தரவேண்டும். அந்தவகையில் இலங்கை சின்மயா மிஷனின் பணிகள் பாராட்டுக்குரியன. தொடர்க அதன் பணிகள்.

## சீருடை முத்திரைகள் நல்லூரில் தேக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராம அலுவலர்பிரிவுகளில் மாணவர்களுக்குரிய இலவச சீருடைத் துணி முத்திரைகள் உரியவர்கள் பெற்றுக்கொள்ளாததை அடுத்து தேங்கியிருப்பதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனவே, சீருடை முத்திரைக்குரியவர்கள் உடனடியாக முத்திரைகளைப் பெற்று ப.நோ.கூ.சங்கக் கடைகள் மூலம் சீருடைப் பொதிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் -

இதன் மூலம் கிராம அலுவலர்கள், கூட்டுறவுச் சங்கத்தினர் ஆகியோரின் சிரமங்களைக் குறைத்துக் கொள்ளலாம் என்றும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.(எ-180)

## ஒரே தடவையில் 10 மாடுகள் உயிரிழப்பு!

கரவெட்டிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை தனி ஒருவருக்குச் சொந்தமான 10 மாடுகள் ஒரே தடவையில் இறந்து போயுள்ளன.

மாடுகள் அனைத்தும் ஒரே தடவையில் இறந்தமைக்கு நச்சுப் பதார்த்தம் உணவில் கலந்திருந்தமையே காரணம் என்று இறந்த மாடுகளைப் பரிசோதித்த வடமராட்சி கால்நடை வைத்திய அதிகாரி ஊர்ஜிதம் செய்துள்ளதாகத் தெரியவருகிறது.(ம-70)

## வலி.வடக்கில் அ.அட்டை பெறாதோருக்கு!

யாழ்ப்பாணம்,ஏப்.4

வலிகாமம் வடக்கு பிரதேச செயலா பிரிவிற்குள் மீளக் குடியமர்ந்தவர்களில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் தத்தம் பிரிவு கிராம சேவையாளர்களுடன் தொடர்புகொண்டு தேவையான அறிவுறுத்தல் களைப் பெற்றுக்கொள்ளுமாறு வலிகாமம் வடக்கு உதவிப் பிரதேச செயலர் கே.பீதாம்பரம அறிவித்துள்ளார்.(ம-6)

## பாடசாலை கணனியகம் திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.4

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'கணனியகம்' திறப்பு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவா சங்கத் தலைவர் இ.கங்காதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வைபவத்தில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக இளைப்பாறிய பேராசிரியர் கலாநிதி எஸ்இராஜேந்திரன் பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற உபஅதிபர் ஆ.சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.(ம-ரி)

---

**காணத் தவறாதீர்கள்,**

**மரபு வழியில் ஓர் இசைநாடகம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்மன்றத்தின் ஆதரவில் ஈழத்து முன்னணி இசைநாடகக் கலைஞர்கள், யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகத் தயாரிப்பில் இணைந்து வழங்கும்,

### "சத்தியவான் சாவித்திரி"

(இசை நாடகம்)

இடம்: யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கைலாசபதி கலையரங்கம்.

காலம்: நாளை (05.04.2003) சனிக்கிழமை பி.ப. 3.00 மணி.

நிகழ்வுத் தலைமை: பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள், (தலைவர், யா.நா.வ.கழகம்)

நுழைவு அன்பளிப்பு: மாணவர்கள் 25/=
பெரியோர் - 50/=, 100/=

(29.03.2003 திகதிக்குரிய நுழைவுச் சீட்டுக்கள் யாவும் 05.04.2003 நிகழ்வுக்குச் செல்லுபடியாகும்.)

யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகம்,
யாழ்ப்பாணம்.

கலைநிகழ்வினை வாழ்த்தி வழங்குவோர்:
**சச்சியா இரும்பகம்**
பிரதான வீதி, வட்டுக்கோட்டை. (16306)

---

## நினைவு கூருகிறோம்



ஒளிர்ந்தது 26 - 12 - 1942

அணைந்தது 30 - 03 - 1998

### அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா

(முன்னாள் கல்விப் பணிப்பாளர், வலயம் - 1)

04.04.2003

பிறர் பிள்ளை தலை தடவி
தன் பிள்ளை வளர்த்ததனால்
தரணியிலே உயர்ந்துவிட்டீர்
தவப் பேறும் அடைந்துவிட்டீர்!

"மாணிக்கம்"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (16274)

அன்போடு நினைவு கூரும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

---

## புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருஷம் பங்குனி 24ஆம் நாள் (07.04.2003) திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரை உள்ள சுபமுகூர்த்த வேளையில் **பேக்கரி லேன், உடுப்பிட்டி** என்னும் முகவரியில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற இல்லத்தில் புதுமனை புக இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


★ இவ் அழைப்பினை தயவுசெய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தங்கள் நல்வரவை நாடும்:
நாதஸ்வர வித்துவான் கலைமாமணி
**L.S.ஜெயநாதன் கண்ணாம்பாள்**
**தம்பதியினர்.**

*பேக்கரி லேன், உடுப்பிட்டி.*
*(உடுப்பிட்டிச் சந்தி - யாழ்ப்பாண றோட்)* (16270)

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 16 - 09 - 1957

மறைவு 01 - 01 - 2003

### அமரர் குழந்தையன் தெய்வேந்திரம்


(05.04.2003)

01.01.2003 அன்று இறைவனடி சேர்ந்த அமரர் குழந்தையன் தெய்வேந்திரம் அவர்களது இறுதிச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் ஆறுதல் கூறியோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை (05.04.2003) சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கரணவாய் கிழக்கு,*
*வல்லியாவத்தை,*
*கரணவாய்.* (16271)

பிரிவால் துயருறும்:
திருமதி கு.சின்னப்பிள்ளை (தாய்).
திருமதி அருந்தவராஜா (சகோதரி).

---


சிவப்பு அரிசி, சம்பா, வறுத்த சிவப்பு அரிசி மா,
மிளகாய்த்தூள், நிறை உணவு மா

புதிய வருடத்தில் புத்தாண்டு பிறப்புடன்
சதொசவுக்கு வந்துவிட்டது முருகன் தயாரிப்புகள்

சுவையில் குணத்தில்
தரத்தில் மேலோங்கியன்வ

## 'முருகன்'

தயாரிப்புகள்
சதொச விற்பனை நிலையத்தினூடாக
வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர்
**ரவி கருணாநாயக்க அவர்களின் முன்னிலையில்**
ராஜகிரிய விற்பனை நிலையத்தில் இன்று மு.ப.
8.30 மணி முகூர்த்த வேளையில் விற்பனைக்கிடப்படும்.

இன்று முதல் கீழ்க் காணப்படும் சதொச விற்பனை நிலையங்களில் முருகன் தயாரிப்புகளை பெற்றுக்கொள்ளலாம்

▪ வெளிசரை ▪ ஜாவத்தை ▪ கொழும்பு-கமர்சியல் ▪ யாழ்ப்பாணம் ▪ நுகேகொடை ▪ மஹரகமை ▪ வொக்ஸோல் வீதி ▪ பம்பலப்பிட்டி ▪ தெஹிவளை ▪ வெள்ளவத்தை ▪ ரத்மலானை ▪ கல்கிசை

விநியோகத்தர்கள்
அபெக்ஸ் இம்போர்ட்ஸ் மார்கட்டிங் (பிரைவேட்) லிமிட்டெட்.
40/1, தனியம் வீதி, தெஹிவளை. தொலைபேசி 723727. பெக்ஸ் 723727

# போரார்வலர்களுக்கு வாய்ப்புகளை அரசும் புலிகளும் வழங்கிவிடக்கூடாது!

**சமாதானத்திற்கு எதிராக போர் ஆர்வலர்களால் உருவாக்கப்படும் தடைகளை அரசு அகற்ற வேண்டும். அதேநேரம், போரார்வலர்களுக்கு விடுதலைப் புலிகள் வாய்ப்புக்களை வழங்கக்கூடாது என்கிறார் கட்டுரையாளர் காமினி வியன்கொட. "ராவய" வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

**போர்**நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக எழும் பிரச்சினைகள் படிப்படியாக உக்கிரமடைந்து வருவதைக் காணமுடிகிறது. இது ஆச்சரியப்படத்தக்கது அல்லாவிடினும், சச்சரவு நிலையிலிருந்து மோதல் நிலையாக மாறி கடைசியில் பயங்கரமான இழப்புக்களுக்கு வழிவகுப்பதாக அமைவதற்கு இடமளிப்பது புத்திசாலித்தனமல்ல. கடந்த சில நாள்களின் முன்னர் விடுதலைப் புலிகளின கப்பல் ஒன்று ஸ்ரீலங்கா கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டமை இந்த நிலைமையின் பாரதூரத்தன்மையை எமக்கு விளக்குகிறது.

தாம் இதுவரை தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் இவ்வாறான நிகழ்ச்சிகள மூலம் உறுதிப்படுத்தப்படுவதாகக் கூறுவோர், தாம் அவ்வாறு எதிர்வுகூறியமை குறித்து இந்தவேளையில மகிழ்ச்சி அடைவர். பொ.ஐ.முன்னணி அரசியல்வாதிகள் மத்தியிலும் இந்நிகழ்ச்சி அவ்விதமான மகிழ்ச்சி உணர்வை உருவாக்கியுள்ளது. அண்மையில் பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் மங்களசமரவீர தெரிவித்த கருத்து பொ.ஐ.முன்னணியினரின் மகிழ்ச்சிக்குச் சரியான சாட்சியமாக அமைந்துள்ளது. ஐ.தே.முன்னணி அரசுக்கோ மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கோ கடற்படையினருக்கும், விடுதலைப் புலிகளின் கப்பலுக்கும் இடையேயான மோதல் குறித்து தெரியவாராதிருந்த நிலையில், நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதி உடனடியாக அக்கப்பலை மூழ்கடிக்குமாறு உத்தரவு வழங்கியதாக அவர் தெரிவித்திருந்தார். கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் பற்றி ஜனாதிபதி மட்டுமல்ல, கடற்படைத் தளபதியும் கூட அச்சம்பவம் நடந்து முடிந்த பின்னரே தெரிந்துகொண்டதாகப் பின்னர் கிடைத்த தகவல்கள் மூலம் அறியமுடிந்தது. தாம் செய்யாத ஒரு வேலையை, அது தம்மாலேயே செய்யப்பட்டதெனக் காட்டிக்கொண்டமை அச்சம்பவத்தால் மங்கள சமரவீர பெரிதும் மகிழ்ச்சியடைந்தார் என்பதை எடுத்துக்காட்டியது. அந்த வகையில் நோக்கும்போது, ஒரு காலத்தில் வெண்தாமரை இயக்கம் பற்றிப் பேசிவந்த ஓர் அரசியல்வாதியின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை உணரமுடியும்.

இலங்கையின் முப்படைகள் மற்றும் பொலீஸ் துறைகள் மட்டுமல்ல நீதித்துறை உட்பட்ட அரச சேவைகள் யாவும் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்ட நிலையில் இயங்குவதை யாவரும் அறிவர். ஆனால், ஸ்ரீலசு.கட்சி அல்லது ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஒருவர் நீதித்துறை மற்றும் பொலீஸ் துறையின் உயர் பதவி ஒன்றை வகிக்கிறார் எனக்கூறுவதும், ஸ்ரீல.சு.கட்சி மற்றும் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஒருவர் அவ்வித பதவிக்குள் ஊடுருவியதாகக் கூறுவதும் வெவ்வேறானவை. விசேடமாக இம் முக்கிய இரு கட்சிகளும் 1970ஆம் ஆண்டு முதல் தம் வழக்கமாகக் கொண்டிருந்த இப்பழக்கம், கடந்த அரசுக் காலத்தில பிரதம நீதியரசர் பதவி வரை வியாபித்தது. இவ்வாறு தமக்கு விருப்பமானவர்களை உயர் நிலைகளில் நியமனம் பெறச்செய்ய முடியாதவர்கள், அதாவது அரச அதிகாரத்தைப் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொள்ளாதவர்கள் என்ன செய்வர்? ஒருவர் புதிய பதவி ஒன்றுக்குள் நுழைவதைவிட ஏற்கனவே அவ்வித உயர் பதவி ஒன்றை வகித்து வருபவர் மீது தமது கொள்கைகளைத் திணித்து அவரைத் தம் பக்கம் இழுப்பதில் வெற்றியடைவதோடு, தமது நோக்கங்களுக்கு அமைய அவரின் சேவையையும் பெற்றுக்கொள்கின்றனர். தாம் நேரடியாகச் சம்பந்தப்படாது தமது பிரதிநிதிகள் மூலம் இவ்வகை நடவடிக்கைகளை பல பிரபல புள்ளிகள் நிறைவேற்றிவந்தனர். சமாதான நடவடிக்கைகளின் பின்னணியில் எவ்வித தடைகளும் ஏற்படாது விடுதலைப்புலிகள் அமைப்பு எவ்வித நிபந்தனைகளையும் முன்வைக்காத போதும் தமது முப்படைகள், பொலீஸார் மற்றும் நீதித்துறை போன்ற அரச அமைப்புக்கள் மேற்கூறிய அதிகார பலத்தைப் பிரயோகித்து வந்ததாக முன்னைய நாள்களைவிட இன்று மிகத் தெளிவாகியுள்ளது.

கப்பல் மூழ்கடிக்கப்பட்ட நிகழ்ச்சி தொடர்பாக எவராலும் நிச்சயமான முடிவுக்கு வர இயலாதுள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்பின் குறிப்பிட்ட கப்பல் ஆயுதங்களை ஏற்றிச் சென்றதா? அல்லது வியாபாரப் பொருள்களை எடுத்துச்சென்றதா என்பதல்ல இப்போதுள்ள பிரச்சினை. அக்கப்பலில் ஆயுதங்கள் கடத்தப்பட்டதாக வைத்துக் கொண்டாலும், அக்கப்பலை மூழ்கடித்து பல உயிர்கள் பலிகொள்ளப்படுவதற்குப் பதிலாக மாற்று நடவடிக்கைகள் ஏதும் இருக்கவில்லையா என்பதே தற்போதுள்ள வினாவாகும். இவ்விடயத்தில் பெரும்பாலானோர் கொண்டுள்ள அதீத நம்பிக்கை குறித்து ஆராய்வது முக்கியமானதாகும். தமது போராளிகளைப் பலப்படுத்தல், ஆயுதங்களைச் சேகரித்தல், போராளிகளைப் பயிற்றுவித்தல் மற்றும் புதிதாக உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல் ஆகிய விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள சமாதான நடவடிக்கைகளைப் பயன்படுத்துகிறார்கள் என நாம் அர்த்தம் கொள்கின்றோம்.

**தமிழில்: வியெஸ்ரி**

அவ்விதம் நடைபெறவில்லை என நாம் உறுதியாகக் கூறவும் முடியாது. ஆனால், அத்தோடு அவ்விதம் இடம்பெறாது எனக்கூற இயலாத வேறொரு பக்கத்தையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. தனது படைகளைப் பலப்படுத்தல், நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்தல், உலகத்தின் பலம் வாய்ந்த நாடுகளின் ஊடாக விடுதலைப் புலிகள் அமைப்பை மட்டுப்படுத்தல் மற்றும் அமெரிக்கா போன்ற நாட்டிடம் நவீன யுத்தக் கப்பலை அன்பளிப்பாகப் பெறுதல் ஆகிய எமது அரசின் நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் அமைப்பு எந்தவகையில் நோக்குகிறது? ஏதோ ஒரு வகையில் மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்படுமானால் அரச படைகள் முடிந்த வரையில் இராணுவ ரீதியில் அதனை எதிர்கொள்ளும் எனவும், அதேநேரம் விடுதலைப் புலிகள் பின்னடைவுகளுடன் அதனை எதிர்கொள்வர் எனவும் எவராவது நம்புகிறார்களா?

இதிலிருந்து விடுதலைப்புலிகள் விரும்பியவாறு ஆயுதரீதியில் மேன்நிலை பெறுவதற்கு சமாதான நடவடிக்கைகள் என்ற பெயரில் இடமளிப்பதற்கு அரசு கடப்பாடு கொண்டுள்ளது என அர்த்தமல்ல. போர் வலுவை மேம்படுத்த ஒருதரப்பினர் மட்டும் பூரண உரிமை கொண்டிருக்க முடியாது. பரந்த கடற் பிராந்தியத்தின் உரிமையும் அதிகாரமும் அரசுக்கு உண்டென்பதால், விடுதலைப் புலிகளின் வெளி நடவடிக்கைகளை அரசால் இலேசாக நிர்வகித்துக் கொள்ள இயலுமென அரச தரப்பு நம்பியிருந்தது. கடற் பிராந்திய அதிகாரம் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பெரிதாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான வேளையில், தரையிலுள்ள படையினரின் இராணுவ சக்திக்கு அமைய பூகோள ரீதியாக எல்லைகளை வகுக்க இருதரப்பினரும் உற்சாகம் காட்டியது போன்று தரை தவிர்ந்த பகுதிகளிலும் போர் நடவடிக்கைகள் தொடர்பான விடயத்திலும் இவ்விரு தரப்பினிடையேயும் புரிந்துணர்வு உருவாக்கப்பட வேண்டியிருந்தது. அவ்விதம் இணக்கம் காணப்பட்டிருப்பின், அரச கட்டுப்பாட்டிலுள்ள கடலில் ஆயுதங்களை கொண்டு செல்லுதல் மற்றும் ஆயுதங்களை நாட்டிற்குள் கொண்டு வருதல் ஆகியன தொடர்பாக புலிகளிடம் விரல் நீட்டிக் கேட்பதற்கு அரசாங்கத்திற்கு வாய்ப்புகள் இருந்திருக்கும்.

ஆனால், இன்று ஆயுதங்கள் கடத்தப்பட்டனவா இல்லையா என்பது பற்றிப் பேசப்படவில்லை. பதிலாக விடுதலைப் புலிகளின் கப்பலை மூழ்கடித்தமை எமது கட்டுப்பாட்டுககு உட்பட்ட கடற் பிராந்தியத்திலா அல்லது சர்வதேசக் கடற்பரப்பிலா என்ற விடயம் பற்றியே எம்மால் பேசிக்கொள்ள முடிந்திருக்கின்றது. கடலில் 220 கடல் மைல்களுக்கு அப்பாலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாக விடுதலைப் புலிகள அமைப்பு கூறுகிறது. அவ்விதம் நடைபெற்றிருப்பின் அக்கப்பல் தொடர்பாக பிரச்சினை கிளப்பும் உரிமை ஸ்ரீலங்கா அரசுக்குக் கிடையாது. ஆனால், இச்சம்பவம் 180 கடல்மைல் தூரத்திலேயே இடம்பெற்றதாக அரசு தெரிவிக்கிறது. கடலில் இச்சம்பவம் இடம்பெற்றமையால் இவ்விரு தரப்பினாலும் கப்பல் மூழ்கிய சரியான இடத்தைக் குறிப்பிட்டுக் காட்ட இயலாது. அடுத்து, முதலில் விடுதலைப் புலிகளின் கப்பலில் இருந்தே தம்மீது தாக்குதல் தொடுக்கப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். முதலில் தாக்குதலை ஆரம்பித்தவர்கள் விடுதலைப் புலிகளா அல்லது கடற்படையினரா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு கடற்படையினர் கூறும் விடயங்களே சாட்சியமாக உள்ளன. ஏனெனில், விடுதலைப் புலிகளின் கப்பலில் இருந்த அனைவரும் இறந்து போய்விட்டனர். அவ்வாறே கடல் எல்லையைக் கொண்ட ஒரு நாட்டில் கடல் பொருளாதார வலயமாக கரையோரத்தில் இருந்து 200 கடல் மைல்களைக் கொண்ட எல்லைக்குள இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமா என்பது குறித்து தெளிவில்லை.

தொழில் நுட்ப ரீதியான விடயங்களைத் தெரிந்துகொள்ளும் நோக்கிலேயே இவ்விதம் நாம் விவாதிக்க வேண்டியுள்ளது. சமாதானத்தை எட்டவிழையும் உளப்பூர்வமான விசுவாசம் எம் இருதரப்பினரிடையேயும் காணப்படவில்லை. சமாதானத்துக்கான தேடலை விடுத்து, யுத்தத்தில் எவ்வாறு தோல்விகளைத் தவிர்க்கலாம் எனச் சிந்திக்கக்கூடாது. இருப்பினும், தோல்விகளைத் தவிர்க்கும் நோக்கல் மீண்டும் திடீர் யுத்தத்தின் பக்கம் திரும்புவதற்கும், அவ்விதம் ஒரு சூழ்நிலையைத் தேற்றுவிப்பதற்கும் இரு தரப்பினரும் இடமாளிப்பதாக தோன்றுகிறது.

அரசுக்கும் எதிர்கட்சியினருக்குமிடையே புரிந்துணர்வு இல்லாத காரணத்தால் விடுதலைப் புலிகளுக்கு அவர்களது எதிர்காலம் பற்றி இயற்கையான பயம் உருவாவதை நாம் நேர்மையுடன் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒரு புறம் அரச படைகளை யுத்தத்திற்கு தயார்ப்படுத்தும் நடவடிக்கைகள், மறுபுறம் தென்பகுதியில் நிலவும் அரசியல் மற்றும் தேசியசசிக்கல்கள். இவற்றின் முன்னால் முடிந்த வரை அதிஉச்ச ஜாக்கிரதையுடன் இருப்பதைத் தவிர விடுதலைப் புலிகளுக்கு வேறு மார்க்கம் எதுவுமில்லை. ஆனால், தெற்கின் சந்தர்ப்பவாத அரசியலுக்கு இலவசமான வாய்ப்புக்களை வழங்காமல் விடுதலைப் புலிகள் கவனத்துடன் செயற்படவேண்டும். தனி இராச்சியக் கோரிக்கைக்குப் பதிலாக சமஷ்டி ஏற்கத் தயாராக உள்ளதாகத் தெரிவித்ததன் மூலம் தென்பகுதி போரார்வ அரசியல் தலைமைகளை நிராயுதபாணிகளாக்கிய விடுதலைப் புலிகள் அமைப்பு, வேறு செயற்பாடுகள் மூலம் அவர்களைப் போருக்குத் தூண்டுகிறது. ஒரு வேளை தாங்கள் பொறியில் அகப்பட்டு விட்டோம் என்ற சந்தேகம் புலிகளின் தலைமைக்கு துளிர்விட்டிருக்கவும்கூடும். அந்த சந்தேகத்தைப் போக்கும் பொறுப்பு அரசினதாகும். வடக்கிற்கான ஏ - 9 பாதையை திறந்தமையாலும், கிளிநொச்சிப் பகுதியில் அழிவுற்ற வீடுகளை நிர்மாணித்து வழங்குவதிலும் மற்றும் இடம்பெயர்ந்த தமிழ் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கையை மேற்கொள்வதாலும் தமிழ் மக்களின் மனங்களில் இடம்பிடிக்க முடிந்தாலும், சிங்கள மக்கள் தொடர்பாக அவர்கள மனதில் உள்ள சந்தேகத்தை போக்கும் விதத்தில் தென்பகுதியில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். இது விடயம் தொடர்பாக இதுவரை அரசு என்ன முயற்சி மேற்கொண்டுள்ளது? எதுவும் இல்லையென்றே கூறமுடியும். தென்பகுதி பொது மக்களுக்கு தற்போதைய நிலைமையை விளக்கிக் கூறுவதுடன், அவர்களை இம்முயற்சிகளில் பங்கேற்க வைப்பதற்கு, ஆக்ககுறைந்தது முக்கிய எதிர்கட்சியுடன் புரிந்துணர்வைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையாவது இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லை. இந்த நிலையில், எந்த வேளையிலும் பொங்கியெழக்கூடிய நிலையில், உள்ள தென்பகுதி மக்களை எதிர்கொள்வதற்கு வடபகுதியைத் தயார் நிலையில் வைத்திருந்தால் மட்டும் போதுமா? ☆

# ஆயுத வியாபாரத்துக்கு...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்து விடுவார்கள். நேசநாடாக இருக்கும் இங்கிலாந்திலும் எதிர்ப்புகள் பலமாகும். இப்போதே எதிர்ப்பில் மூச்சுத் திணறும் இங்கிலாந்து அதிபர் ரொனிபிளேயர் தனது ஆதரவை விலக்கி போரிலிருந்து பின்வாங்கக்கூடும். அது அமெரிக்காவை ரொம்பவே நிராதரவாக்கிவிடும்.

தோல்வியை ஒப்புக்கொண்டு போரைக் கைவிடுவது தவிர புஷ்ஷுக்கு வேறு வழியிருக்காது.

என்ன நடக்குமோ என்று உலகம் முழுக்க கன்னத்தில் கை வைத்துக் காத்திருக்கின்றது.

1991ஆம் ஆண்டு நடந்த வளைகுடாப் போரின்போது கிட்டத்தட்ட 60ஆயிரம் ஈராக்கிய வீரர்கள் அமெரிக்காவிடம் சரணடைந்தனர். அவர்கள் சவூதியில் முகாம்களில் அடைக்கப்பட்டிருந்தனர்.

டி.வி. நிருபர்கள் அவர்களைப் படம் எடுக்கப் போனபோது "தயவு செய்து எங்கள் முகங்களை டி.வியில காட்டாதீர்கள்" என்று சொல்லிக் கதறினார்கள்.

ஈராக்கின் எல்லையில் ஒரு கொலைப்படை எப்போதும் தயாராக இருக்கும். போரின் வேகத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் யாராவது எல்லை தாண்டிப்போய் எதிரி நாட்டுப் படையிடம் சரணடைய முயன்றால் இவர்களால் சுட்டுக்கொல்லப்படுவார்கள். ஈரான்-ஈராக் போரின் போதும் வளைகுடாப் போரின் போதும் சதாம் தன் வீரர்களை கட்டுக்குள் வைத்திருந்தது இப்படிப் பயமுறுத்தித்தான்!

ஆனால், அமெரிக்கா சுற்றி வளைத்துத் தாக்கியதும் ஈராக் வீரர்கள் பலர் மண்டியிட்டு சரணடைய, அவர்களோடு சேர்ந்து இந்தக் கொலைப்படையும் சரணடைந்தது தான் எதிர்பாராத திருப்பம்!

இப்போதுகூட அமெரிக்கா, ஈராக் முகாம்களை நோக்கி "சரணடைந்தால் உயிர் தப்பலாம். இல்லையேல மரணந்தான்!" என்று அறிவிப்புக் கொடுத்து அவர்களது மன உறுதியைக் குலைக்கப் பார்க்கிறது.

கடந்த இரண்டு வருடங்களாக பொது இடங்கள் எதற்கும் சதாம் வருவதில்லை. அவரது பயணம், தங்குமிடம் எல்லாமே இரகசியமாக வைக்கப்படுகின்றன. கிட்டத்தட்ட 15 ஆயிரம் மெய்க்காவலர்கள் சதாமை பாதுகாக்கும் குடியரசுப் படையில் இருக்கிறார்கள். இந்தப் படையை நிர்வகிப்பவர் சதாமின் இளைய மகன் குசாய் ஹுசைன். இந்தப் படைவீரர்கள் சுழற்சி முறையில் சதாமைப் பாதுகாக்கிறார்கள்.

இவர்களில் ஒருவரையாவது அமெரிக்க உளவாளி ஆக்கும் திட்டம் தவிடுபொடியாகிவிட்டது.

சதாமுக்காக விசேஷமாக பதுங்குகுழிகள் பக்தாத்தின் மூலைமுடுக்கெல்லாம் இருக்கின்றன. இரண்டாயிரம் கிலோ குண்டு போட்டு வெடித்தால் கூட உள்ளே இருப்பவர்களுக்கு ஒன்றும் ஆகாது. சதாம் இதனுள்ளே இருந்தபடிதான் தன் படை வீரர்களுக்கு கட்டளை இடவசதியுண்டு. போர்டாங்கிகள், வைத்தியசாலைகள் என்று எல்லாமே இந்தப் பதுங்குகுழிக்குள் இருக்கின்றன.

முன்னைய வளைகுடாப் போரின் போது, சதாம் ஏகப்பட்ட ஆச்சரியங்கள் கொடுத்தார். ஒருநாள் காரில் பயணித்தபடி தூங்குவார். அடுத்த நாள் பஸ்ரா நகருக்குப் பக்கத்தில் ஒரு விவசாயின் பண்ணை வீட்டில் போய் இரவில் தங்கி, சாப்பிட்டு, தூங்கி இன்ப அதிர்ச்சி கொடுத்தார். ஒருநாள் பாலைவனத்தின் நடுவே டெண்ட் அடித்துத் தூங்கினார்.

இப்படிப்பட்ட மர்மமனிதனை அமெரிக்கா தனது ஆக்கிரமிப்புக் கரங்களால் அடக்குமா? அல்லது அந்தக் கரங்களைச் சுட்டுக்கொல்லுமா?

பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ★

### புத்தளம் நகர பிதா மீதான தாக்குதலுக்கு

# நகரசபை வருத்தம் தெரிவித்து தீர்மானம் விசாரணை முடிந்த பின் வேறு தீர்மானங்கள்

'புத்தளம் நகர பிதா பொலீஸாரினால் தாக்கப்பட்டது குறித்து நகர சபை வருத்தம் தெரிவித்திருக்கின்றது. எனினும், தற்போது அச்சம்பவம் குறித்து பூரண விசாரணைகள் இடம்பெறுவதால் விசாரணைகள் முடிவுற்ற பின் அது குறித்து வேறு தீர்மானங்கள் எடுக்கப்படும்.'

- புத்தளம் நகர சபை விசேட கூட்டம் நேற்று துணைத்தலைவர் குயின்டன் பர்னாந்து தலைமையில் கூடியபோது மேற்கண்ட தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

- கடந்த 29 ஆம் திகதியன்று நகர பிதா ஏ.எம்.எச் ஹுசைன் பொலீஸாரினால் தாக்கப்பட்டது குறித்து ஆராய இவ் விசேட கூட்டம் கூட்டப்பட்டது. நகர பிதா ஹுசைனும், எதிரணியின் ஒரே ஒரு உறுப்பினரான என்.எம்.நஸ்மியும் கூட்டத்திற்கு சமுகந்தரவில்லை. ஏனைய ஏழு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் சமுகந்தந்தனர்.

கூட்டத்தில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. ஆர்ப்பாட்டத்தின் போது நகர பிதா அவ்விடத்துக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லையென்றும், நகர பிதா ஏன் சென்றார் என்றும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

நகர பிதாவுக்குச் சொந்தமான கெப் வாகனம், டிராக்டர் வண்டிகள் ஆர்ப்பாட்டத்தின் போது வீதிகளில் குறுக்கே போடப்பட்டது குறித்தும் பலர் ஆட்சேபம் தெரிவித்தனர்.

நகரசபைக்குச் சொந்தமான வாகனங்களை அங்கு கொண்டு போக யார் அனுமதி கொடுத்தார் என்பது பற்றி விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டது. இறுதியில் முன் குறிப்பிடப்பட்ட தீர்மானம் நிறைவேறியது. (எ)

## வாகன வரி செலுத்தாதோருக்கு தண்டப்பணம் விதிப்பு

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் 2003ஆம் ஆண்டுக்கான வாகன வரி செலுத்தாத வாகன உரிமையாளர் பலருக்கு கடந்த முதலாம் திகதி தொடக்கம் தண்டப்பணம் அறவிடப்பட்டு வருகின்றது.

நுணாவில் சந்தியிலுள்ள சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸார் வாகனங்களை அவ்விடத்தில் மறித்து ஆவணங்களை சோதனையிட்டு வாகனவரி, காப்புறுதி செலுத்தாத வாகனங்களுக்கு தண்டப்பணம் விதிக்கின்றனர்.

# உண்மையைத் தட்டி எழுப்புவோம்

தூய வாழ்வு வாழ்வது பற்றிச் சிந்திக்க அழைப்பது தவக்காலமாகும். எமது சமூகம் எப்போதுமே பிறரைக் குற்றஞ்சொல்லும் சமுதாயமாக இருக்கின்றது. நலிவோரையும் அவர்களுடைய நடத்தையைக் குற்றஞ்சாட்டி பழிகூறுவது எம் ஒவ்வொருவருக்கும் சர்வசாதாரணம். எம் குடும்ப விடயம் பற்றி கதைக்கின்றோமோ இல்லையோ அடுத்த குடும்பம் பற்றி நிச்சயம் ஆராய முற்படுவோம்.

மேலும், நான் நல்லவன் என்பது கோயில் வழிபாடுகளில் ஒழுங்காக பங்கெடுத்தலும், கோயிலோடு மட்

## தவக்காலச்சிந்தனை

-31ஆம் நாள்-

டும் முடிந்து விடுகின்றதா எனச் சிந்திப்போம். எம் சமூக வாழ்வில் நான் எனது என்ற வட்டத்துள் இன்னும் நின்று கொண்டிருக்கின்றோம். அடுத்தவன் எப்படிப் போனால் என்ன? நான் எனது குடும்பம் சரியாக இருந்தால் சரி. ஏனையவை பற்றி எவ்வித அக்கறையும் இல்லை. எனக்கேன் வீண் வம்பு என பொய்யானவற்றிற்குத் துணை போகின்றோம். இதனால் உண்மை ஒழிந்து போகின்றது - ஒழித்துக் கொள்கின்றது.

மேலும், நாம் பிறரை அவர்களுடைய தோற்றம், குலம், மதம், அணிந்துள்ள ஆடைகளைக் கொண்டு மதிப்பிடுகின்றோம். ஆனால், இவையெல்லாம் இறைவன் எதிர்பார்ப்பதில்லை. எம் எளிய உள்ளத்தினையே அவர் விரும்புகின்றார். உண்மையினை ஏற்கின்றார். எனவே, நாமும் பிறரை எவ்வித எதிர்பார்ப்புமின்றி அன்பு செய்வோம். எம் சமூகத்தில் நடைபெறும் தீய சக்திகளுக்கு எதிராகக் குரல் கொடுப்போம்.

அடுத்தவன் செய்யட்டும். அடுத்தவன் சமாதானம் பெற்றுத்தரட்டும் எனஇருக்காமல் சமூக ஒற்றுமை, நீதியினைக் கட்டிக்காத்தல், சமாதானத்திற்காக உழைப்பது எம் ஒவ்வொருவரதும் கடமை என்பதை உணர்ந்து செயல்படுவோம். தீங்கு செய்யாதீர்.

## ஸா.மேசி

நன்மை செய்வீர். நல்லது செய்யாவிட்டாலும் பரவாயில்லை. செய்பவர்களைத் தடுக்காதீர். ஏனென்றால் இவர்களால் தான் இவ்வுலகம் இன்னும் உயிரோடிருக்கின்றது. உண்மை தூங்கிக்கொண்டிருக்கின்றது. தட்டி எழுப்புவோம். ★

---

*யாழ். மக்களின் நலன் கருதி*

**ஸ்ரீ கல்கி பகவானின் ஐஸ்வர்யயுக அமைப்பகம் வழங்கும்**

## ஐஸ்வர்ய ஹோமம்



இடம் :- ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர் மண்டபம்
*(பெருமாள் கோயில் அருகில்)*
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

நேரம் :- மாலை 5 மணி - 8 மணிவரை.

காலம் :- பங்குனி 23 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (6.4.2003)

நடத்துபவர்கள் :- ஸ்ரீகல்கி பகவானின் சீடர்கள்
*ஸ்ரீ ராஜேஷ் பகவத் தாஸா*
*ஸ்ரீ சுஜய் பகவத் தாஸா*

ஹோமம் என்பது ஒரு புனிதமான அக்னி வேள்வி. இயற்கை நமக்கு அளித்துள்ள வலுவான உந்துசக்திகளை எமக்கு சாதகமான நற்பலன்களைப் பெறுவதற்கும், எங்கள் விருப்பங்கள் நிறைவேற்றப்படவும் மற்றும் ஆன்மீக வழியில் எம்மை வழிப்படுத்துவதும் ஹோமத்தின் செயற்பாடாகும்.

ஹோமம் அடிப்படையில் பூமியை மாற்று நிலைப்படுத்தி அதன் பிரகாரமாக சத்காமம் பெற உதவும். அத்துடன், முழு மனித சமுதாயத்திற்கும் அவரவா தனிப்பட்ட வாழ்வில் பலவிதமான மங்கள சம்பவங்கள் ஏற்பட அனுக்கிரகிக்கும். பக்தர்கள் கூட்டாகச் சேர்ந்து இக்ஹோமத்தில் பங்குபற்றும் வேளையில, ஹோமம் மேலும் வலுவடைந்து அதி அற்புதமான நிகழ்வுகளைத் தோற்றுவிக்கும். ஹோமங்களில் மிக சக்திவாய்ந்த ஹோமங்களில் ஐஸ்வர்ய ஹோமம் ஒன்றாகும்.

*ஐஸ்வர்ய ஹோமத்தின் பலாபலன்கள்*

- சகல விதமான சுபீட்சத்தை வழங்கும். *(செல்வம், சுகம், நல்லுறவுமுறைகள், ஆன்மீக வளர்ச்சி ஆகியவை இவற்றுள் அடங்கும்)*
- ஆன்மீக முன்னேற்றத்துக்கும், உளவியல் வாழ்விற்குமான தடைகளை முற்றாக நீக்கும்.
- பரந்த முறையில் நோய் நிவாரணம் அளிக்கும்.
- சுபர்வ முயற்சிகளிலும் வெற்றி கிட்டும்.

இப்புனித வேள்வியில் கலந்து அதன் பலாபலன்களைப் பெற்று உய்யுமாறு எல்லோரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

* ஐஸ்வர்ய ஹோமத்தில் பங்குபற்றும் பக்தர்கள் இத்தினத்தில் புனிதம் பேணி இந் நற்கருமத்திற்காக இந்நாளை அர்ப்பணிக்கும்படி பணிவுடன் வேண்டப்படுகின்றனர்.

அனைவரும் வருக! அருளைப் பெறுக

அனுமதி இலவசம். (C-27117)

---

## அமெரிக்க யுத்த எதிர்ப்புக் கூட்டம்

இடம் : City Hall, யாழ்ப்பாணம்.
காலம் : 06.04.2003 ஞாயிறு மாலை 4 மணி.
தலைவர்: சொ.சிவபாலன் (இ.வ.ஊ.ச.)
தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உரையாற்றுவார்கள்.

(16343) — சர்வதேச மார்க்சியக் குழு.

---

## பெயர் மாற்றம்

இல.432, 4ஆம் யூனிற், திருநகர், மல்லாவியில் வசிக்கும் தவராசா தருமராசா ஆகிய நான் 16.03.2003 முதல் எனது பெயரை சட்ட வரம்புகளுக்கமைய தவராசா 'ஷதீஷன்' என மாற்றியுள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

- தவராசா ஷதீஷன்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி உயர்தர வகுப்பு கணிதப் பிரிவு மாணவன்

### செல்வன் மரியதாஸ் பிரதீபன்

03.04.2003 அன்று அகால மரணம் அடைந்ததமையயிட்டு துயரத்தில ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து, எமது கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்கின்றோம்.

பாடசாலை குடும்பம்
(16332) யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.

---

## தேவை

விற்பனையாளர், பில்கிளாக், கணக்காளர், பைண்டர் தேவை. (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அனுபவமுள்ளவர் விரும்பத் தக்கது.) 10.04.2003இற்கு முன் நேரில் வரவும்.

சிங்கம் வர்த்தக நிலையம்,
290, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(16326)

---

## விற்பனைக்கு

HERO Stream 49cc புதிய மோட்டார் சைக்கிள் (Licence தேவையில்லை) விலை 43,000/= side stand+ basket உடன்.

Ford Escort 2door நல்ல நிலையில் உள்ளது. விலை 85,000/= சனிக்கிழமை (05.04.2003) பார்வையிடலாம்.

தென்றல் தேசிய வீரமும்
350, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.
(16322)

---

## தேவை

வெல்டிங், கம்மாலை வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.
தொடர்பு:
**M.T.K. வேக் சொப்**
40, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.
(I.C.R.C. முன்பாக)
(16312)

---

## பொருளியற் கல்லூரி

(யாழ்ப்பாணம், இணுவில்)

**A/L 2004**

## புவியியல்

பகுதிIII
(மானிடப் புவியியல்)
ஆரம்பம் - 05.04.03
யாழ்ப்பாணம் - 9.00
இணுவில் - 2.00
ஆசிரியர்:
P.S. குமரன் B.A. (Hons), Geo.Spl.
(16330)

---

## கொம்பியூட்டர் பிரிண்டிங்

கணனிப் பதிப்புகள், றபர்சீல்கள், ரென்சில் கட்டிங், நோணியோ வேலைகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், அகராதிகள் என்பன பயண்டிங் செய்யலாம்.

**ராஜ் புக் பயிண்டிங் அன் கம்பியூட்டர் பிறிண்டிங்**

43, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(16335)

---

## யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம்

நடத்தும்

## கணித, விஞ்ஞான வழிகாட்டல் கருத்தரங்கு

(க.பொ.த. உ/த)

இடம் : யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி
காலம் : 06.04.2003 (ஞாயிறு)

### நேர அட்டவணை

| | | |
|---|---|---|
| 09.00 - 10.30 | இணைந்தகணிதம் | திரு. S.V.M.மகேந்திரன் |
| 10.30 - 12.00 | இரசாயனவியல் | திரு. அன்பழகன் |
| 01.00 - 02.30 | உயிரியல் | திரு. குணசீலன் |
| 02.30 - 04.30 | பௌதிகவியல் | திரு. சோதிலிங்கம் |

உயர்தர மாணவர்கள் அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வாருங்கள்!
வந்து பயன்பெறுங்கள்!


(C/27108)

---


## DIALOG G.S.M. இன் யாழ்.முகவர்

## DIALLINKS PHONE SHOP இன்

### புதுவருடத்திற்கான (சுபிறு) விசேட சலுகை



எம்மிடம் புதிய கையடக்கத் தொலைபேசியை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு 04.04.2003 இல் இருந்து 04.05.2003ஆம் திகதி வரையும் ஒரு Alcatel Phone இற்கு 1000 /= KIT CARD இலவசம்.



**ALCATEL -10,950=**
**SAGEM - 7,450/=**

DIALOG G.S.M. இன் I.D.D. விலைக்குறைப்பு

KIT CARD (மீள நிரப்பு அட்டை) பாவிக்கும் கையடக்கத் தொலைபேசி உள்ள வாடிக்கையாளர்கள் இரவோ, பகலோ எந்த நேரமும் வெளிநாட்டிற்கான (I.D.D.) தொடர்பை குறைந்த கட்டணத்தில் ஏற்படுத்தலாம்.

1 நிமிடம் 25/=, செக்கனுக்கும் கணக்கிடப்படும்.

உ+ம்: கனடா, சுவிஸ், ஜேர்மன், அமெரிக்கா, லண்டன், டென்மார்க், பிரான்ஸ், நோர்வே, ஆஸ்திரேலியா.

எம்மிடமும் எமது முகவரிடமும் வாங்கும் Kit Cardஇற்கு மட்டும் உள்வரும் அழைப்புக்கு ஒரு நிமிடம் இலவசம்.

**No. 204, DIALLINKS THE PHONE SHOP,**
**K.K.S. Road, Jaffna.** தொ.இல.: 222 5485
(C/27109)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Ceynor பைபர் கிளாஸ் நீளம் 34 1/2' x10 1/2' அகலமான வள்ளம் விற்பனைக்குண்டு. எஞ்சின் யன்மார், 3 சிலிண்டர் S.M.3 மொடல், 45HP (Lord Hear) பயணிகள் லோஞ்சுக்கு உகந்தது. தொடர்பு: குஞ்சண்ணை, வேம்படி, வல்வெட்டித்துறை.(16305)

25 KVA Denyo Sound Proof Genertor விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 0777-633164. (16294)

## வீடு விற்பனைக்கு

"சித்திரகிரி", சுராவத்தை, சுன்னாகம் என்ற இடத்தில் Attach Bathroom உடன் கூடிய 5பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சிவலிங்கம் (J.P.) ஏழாலை மேற்கு, ஏழாலை. (16301)

## வீடு தேவை

கௌரவமான அரசாங்க உத்தியோகத்தை வகிக்கும் 4பேர் கொண்ட குடும்பத்திற்கு அடிப்படை வசதிகள் கொண்ட வீடு கொக்குவில், கோண்டாவில், யாழ்.மாநகர சபை எல்லைகுட்பட்ட பகுதியில் வாடகைக்குத் தேவை. வீடு மிகவும் கவனமாகப் பேணப்படும். விள.இல.1838,மே/பா உதயன்.(16310)

## அபூர்வ ஜோதிடம்

சித்தரின் அற்புத மருந்தியலில் தீராத அபாயமான நோய் குணப்படல், காண்ட முறையில் அதிர்ஷ்ட பலன் அறிதல். தொடர்பு: சனி, ஞாயிறு 9.00 - 2.00 மணி. சேச்முன் லேன், முதலி கோயிலடி, கொக்குவில் மேற்கு. (16304)

## தவறிவிட்டது

சு.மணிராஜா என்பவரின் கையடக்கத் தொலைபேசி செவ்வாய்க்கிழமை (01.04.2003), யாழ்.நகரில் இருந்து கைதடி சாவகச்சேரியூடாக கொடிகாமம் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.83/7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும். T.P. 021 222 2521, 021 222 2216 தகுந்த சன்மானம் வழங்கப்படும். (16279)

## திருமண சேவை

1972ஆம் ஆண்டு, செவ்வாய்க் குற்றமுடைய, B.Sc. பட்டம்பெற்று அரச தொழில் புரியும், மணமகனிற்கு தராதரம் உடைய குடும்பப்பாங்கான பெண் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (16302)

## மணமகள் தேவை

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட, இந்து கௌரவ குடும்ப, அரச பணிபுரியும், 37 வயதுடைய மணமகனுக்கும், 40 வயதுடைய தனியார் துறையில் பணிபுரியும் மணமகனுக்கும் மணமகள்கள் தேவை. முழுவிவரத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 1837, மே/பா உதயன். (16285)

## வணிகக்கல்வியும் கணக்கீடும்

தரம் 10 இற்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் நூல் G.C.E.O/L பரீட்சைக்குரிய பயிற்சி வினாக்களும விடைகளும் அடங்கியது. சகல புத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றது. ஆசிரியர்: தம்பித்துரை பாலகிருஷ்ணன். (16254)

## சேமிப்பு வங்கி கிளைகள் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.4

தேசிய சேமிப்பு வங்கியின் புதிய கிளை ஒன்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மானிப்பாயில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த வங்கிக் கிளையைத் திறந்து வைப்பதற்காக வங்கியின் தலைமை அதிகாரி இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளதாக மானிப்பாய் கிளை முகாமையாளர் வி.அருளானந்தம் தெரிவித்தார்.

இதேவேளை -

திருநெல்வேலிப் பகுதியிலும் சேமிப்பு வங்கியின் புதிய கிளை ஒன்று நாளைமறுதினம் திறந்து வைக்கப்படவுள்ளது. (ம-185)

## அறிவித்தல்

**யா/மானிப்பாய் செல்.ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை முறைசாராக் கல்விப்பிரிவு**

எமது பாடசாலையில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்பு 2003.04.10 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பயில வருவோர் அன்றைய தினம் பாடசாலைக்குச் சமுகந்தரவும்.

(16315) - அதிபர்.

## அறிவித்தல்

**யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் முறைசாராக் கல்விப் பிரிவு**

எமது பாடசாலையில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்பு 2003-04-11ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பயில விரும்புவோர் அன்றைய தினம் பாடசாலைக்குச் சமுகந்தரவும்.

(16313) - அதிபர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை ஆசிரியரும் றெமிங்ரன் கல்வி வளர் சோலையின் நிர்வாகியுமான


**திரு.க.மனோகரன்**

அவர்கள் சமாதான நீதிவானாகப் பதவி ஏற்றுள்ளதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு, அவரது சேவை மேலும் சிறப்புற நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பிரிய - மாணவன்
கோ.கீர்த்தனும்,
குடும்பத்தினரும்.

பொன்னாலை. (16308)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 - 04 - 1938

மறைவு 17 - 03 - 2002

**அமரர் சதாசிவம் நாகலிங்கம்**

ஆண்டு ஒன்றாகியும்
ஆறவில்லை எம் துயரம்.
ஓம் சாந்தி

திடற்புலம்,
வசாவிளான் தெற்கு. (16309)

பிரிவால் துயருறும்:
அன்பான மருமக்கள்.

## விரைவில் மின்விநியோகம

நவாலி,ஏப்.4

சாவல்கட்டு நூறு வீட்டுத் திட்டத்திற்கு இன்னும் சில தினங்களில் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான வேலைகள் மிகத் துரிதகதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ-100)

## அறிவித்தல்

**யா/வட்டு. இந்துக் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவு**

எமது பாடசாலையில் உடையமைத்தல் வகுப்பும்,கணனி வகுப்பும் 2003.04.11 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. பயில விரும்புவோர் அன்றைய தினம் பாடசாலைக்குச் சமுகந்தரவும்

(16314) - அதிபர்.


எமது உயிரினும் இனிய வாடிக்கையாளர்களுக்கு
மகிழ்ச்சியான செய்தி!

**மீண்டும் யாழ்.நகரில்**

# K.S.R.PHOTOS

நாள்: 04.04.2003
நேரம்: மதியம் 12.00 மணி
இடம்: 766, தட்டாதெருச் சந்தி,
K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.
(முன்பு இயங்கிய இடம்)

"யாழ்.ஒளி" என்னும் புதிய பெயருடன் மீண்டும் உதயமாகின்றது.

**"யாழ். ஒளி" வீடியோ புகைப்பட சேவை**
**(K.S.R.PHOTOS)**

குறிப்பு : எமது நிறுவனம் கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களிலும் தொடர்ந்தும் இயங்குகின்றது. (16298)


## நீங்கா நினைவில்

19ஆவது வருடம்



மண்ணுலகில் 23 - 07 - 1923
விண்ணுலகில் 03 - 03 - 1984

**இரத்தினம் மகாலிங்கம்**
(இளைப்பாறிய தபால் சாரதி, யாழ்ப்பாணம்)

முதலாவது வருடம்



மண்ணுலகில் 24 - 08 - 1927
விண்ணுலகில் 16 - 03 - 2002

**மகாலிங்கம் தங்கலட்சுமி**

ஆண்டுகள் எத்தனை சென்றாலும் - எங்கள் நெஞ்சத்தில் வாழும் தெய்வங்களே!
உங்கள் அருளும் ஆசியும் எங்கள் நல்வாழ்விற்கு வழித்துணை வரட்டும்.


மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

14,பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (16311)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்





செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2549558 இருந்து
2568274 வரை
சீட்டிழுப்பு இல. 1389
திகதி 02.04.2003

**வெற்றி எண்கள்**

**03 15 18 23 50**

போனஸ் எண் **51**

ஜக்பொட் பரிசு
ரூபா.2,380,500/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
| --- | --- | --- | --- |
| 5 | - | 2,380,500/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 118 | 10,000/- | 1,180,000/- |
| 3 | 5,832 | 500/- | 2,916,000/- |
| 2 | 98,685 | 20/- | 1,973,700/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 03ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 120,747 | 10/- | 1,207,470/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,487,170/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா.3,314,350/-

தொடர் இல. 3544970க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஏப்ரல் 05ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2549815-0-17
2557173-8-93
2567068-9-67
2550652-7-34
2560862-0-11

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

# இதோ இன்று முதல் யாழ் மக்களுக்கு சன்குவிக் பழரசம்

பல்வகை பழங்களினால் அவற்றின் தரச் சுவைக்கேற்ப
தயாரிக்கப்பட்டுள்ள இச் சன்குவிக் பழரசம் இன்று முதல் உங்கள் மண்ணில்.



sunquick அதிக பழங்கள் அதிக கோப்பைகள்

# அறிவித்தல்

## பச்சிலைப்பள்ளி
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## கிளைக்குழுத் தெரிவு
## 13.04.2003 ஞாயிற்றுக்கிழமை

22, 23. 03.2003 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவிருந்த, கீழ்க் குறிப்பிட்ட கிளைக்குழுக்களுக்கான தெரிவுகள் நிறைவெண் போதியதாக இல்லாத காரணத்தினால் நடைபெறவில்லை. மீளவும் 13.04.2003 ஞாயிற்றுக்கிழமை இக்கிளைகளுக்கான பொதுச்சபைக் கூட்டங்கள் 13.04.2003 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு, சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெறும்.

| கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01. 07 | முகமாலை | திரு.தி.வித்தககலாநிதி | தலைமைக் காரியாலயம், பளை |
| 02. 09 | கிளாலி | திரு.க.சின்னராசா | " " |
| 03 11 | அல்லிப்பளை | திரு.ந.நவநீதன் | " " |
| 04. 13 | தம்பகாமம் | திரு.த.பத்மானந்தன் | " " |
| 05. 14 | சங்கத்தார்வயல் | திரு.இ.ஜெகதீபன் | " " |

முக்கிய குறிப்பு:
இக்கூட்டத்தில் கிளைக்குழுத் தெரிவும், தலைவர், உப தலைவர், செயலாளர் தெரிவும், பொதுச் சபை பிரதிநிதிகள் தெரிவும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன.

ஒப்பம் த.கந்தசாமி
கூ.அ.உ.ஆணையாளர்,
கிளிநொச்சி.

திகதி: 2003.04.02 (சி-27132)

NANDI BRAND RUPIKA TILES

குறைந்த விலையில், நிறைந்த தரத்தில் ஓடுகள், முகட்டோடுகள், கற்கள் பெற்றுக்கொள்ள
ஓட்டின் நிறை 2.5 Kg

ARALIYA STORES
No.11, Negombo Road, Dankotuwa.
T.P. : 031-58174

RUPIKA TILES FACTORY
UDANGAWA, KOCHCHIKADE.
T.P. : 031-77346

No.6, HINDU LADIES LANE,
KANTHARMADAM, JAFFNA.
T.P. : 021-222 3268

தரத்தின் சான்று நந்தி
(16325)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

எமது பாசத்திற்குரிய தந்தை
## அமரர் முத்தையா கார்த்திகேசன்
*(ஓய்வுபெற்ற அதிபர்)*

அவர்களின் மறைவு அறிந்து வருகை தந்து உதவி புரிந்து ஆறுதல் கூறி, அனுதாபச் செய்திகள் அனுப்பிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். இன்று (4.4.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (16339)

அமரரின் பிரிவால் துயருறும்:
கா.லங்கேசன் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சுப்பையா இராமலிங்கம் J.P
*(ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர்)*

கைதடி வடக்கு, கயற்றசிட்டியைப் பிறப்பிடமாகவும் நாவலடி, கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராமலிங்கம் அவர்கள் நேற்று (03.04.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி பாக்கியம் (ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - இலட்சுமிப்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-குட்டிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும் சரஸ்வதிதேவி, நாகேந்திரன்(ஓய்வு பெற்ற இலிகிதர், பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்), சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமரர் சி.தியாகராசா (கிளை முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம்) மற்றும் நடராசா (ஓய்வுபெற்ற சாரதி, அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை), மகேஸ்வரி, காலஞ்சென்ற இராசம்மா மற்றும் சின்னத்தங்கம் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் சி.இராசரத்தினம் ஆகியோரின் சகலனும் தயாபரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சத்தியசீலன் (கிளை முகாமையாளர், நீர்வேலி ப.நோ.கூ.சங்கம்) மற்றும் தயாளினி, தயாமதி (ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்), பிரதீபன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நுதர்சினி மற்றும் பார்த்தீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மிதிலா, டர்ஷன் (கணனி நிகழ்ச்சித் தயாரிப்பாளர், கொழும்பு), சசிதரன் (மாணவன் உயர் தொழில்நுட்ப நிறுவகம்) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் பிரஷாத், நிவேதிகா, ரவிஷங்கர் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
திரு. சு.நாகேந்திரன்
(சகோதரர்)

*நாவலடி,*
*கோப்பாய்.* (16349)

## கலந்துரையாடல்

சண்டிலிப்பாய்,ஏப்.4

வலி. தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களுக்குமான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையங்களின் எதிர்கால வளர்ச்சி, அபிவிருத்தி பற்றி இக்கலந்துரையாடலில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படவுள்ளதாக சபையின் செயலாளர் பி.விற்றர் தெரிவித்துள்ளார்.

(எ-135)

## மெய்வன்மை நடுவர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.4

இலங்கை மெய்வன்மைச் சங்கம் தரம்IV மெய்வன்மை நடுவர்களுக்கான பரீட்சைக் கருத்தரங்கு ஒன்றை நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினமும் யாழ்.இந்துக் கல்லூரியில் நடத்தவுள்ளது.

இலங்கை மெய்வன்மைப் பயிற்சிக் குழுவின் தலைவர் பி.எச்.டி. வைத்தியதிலக, பயிற்றுநர்களான என்.வைரவநாதன், கே.தெய்வேந்திரன ஆகியோர் இக்கருத்தரங்கை நடத்துவர்.

இக்கருத்தரங்கில் புதிய மெய்வன்மை விதிகள் குறித்து விளக்கமளிக்கப்படும்.

(ஐ-3)

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் 20க்கு மேற்பட்ட குறும்படங்களின் தொகுப்பு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை.10மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார். (எ)

## பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,ஏப்.04

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில ஆசிரிய பயிற்சி நெறியை நிறைவு செய்து வெளியேறும் ஆசிரியர்களுக்கான 5நாள் பயிற்சிப்பட்டறை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை முதல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப்பட்டறையில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்கள் தொடர்பான செய்முறைப பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என வடக்கு - கிழக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார் (எ-5)

புதிய வீடியோ CD வெளியீடு
பிரபுதேவா, நாகர்ஜுன் நடித்த
சந்தோச வானிலே
வடிவேல், மணிவண்ணன் நடித்த
நிலவில் களங்கமில்லை
CD களும் பிரதிகளும்
உடன் பெறலாம்.
விஷ்ணு வீடியோ
K.K.S. Road, கோண்டாவில்.
வடமராட்சி வாடிக்கையாளர்கள்
இப்படப் பிரதிகளைப் பின்வரும்
முகவரியில் பெறலாம்.
சோலை வீடியோ
நெல்லியடி.

நிறைஞ்சனாஸ்
விஜய், ரீமாசென் நடித்த
பகவதி
11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி மட்டும் இரவு 8.45 (பு.நே.)
HOLLOW MAN
10.04.2003 முதல் JURASSIC PARK 3
(C-27119)

ராஜா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா
ரோஜாக்கூட்டம்
10.30,2.30,6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30 இற்கும்
(C-27111)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், ஸ்நேகா, ரகுவரன நடித்த
வசீகரா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம)
(16331)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி புவநாதன் சர்மிளா (ராதிகா)

அல்லைப்பிட்டி, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட புவநாதன் சர்மிளா (ராதிகா) நேற்று (03.04.2003) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் புவநாதன் அருள்நாயகி தம்பதிகளின் அன்பு மகளும் தர்சிகா, புஸ்பாகரன் ஆகியோரின் சகோதரியும் தேவாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2003) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

தகவல்:
சிவகாந்தன்
(மாமன்)

*முதலாம் வட்டாரம்,*
*அல்லைப்பிட்டி.* (16351)

## மரியதாஸ் பிரதீபன்
*(இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி)*

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது சங்குவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் பிரதீபன் நேற்று (03.04.2003) வியாழக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் மரியதாஸ் - பாலரதி தம்பதிகளின் அன்பு மகனும் பார்த்தீபன், ஜெனோதீபன், ஜென்சிகா ஆகியோரின் சகோதரனும் நாகரத்தினம், ஞானேஸ்வரியின் பேரனும் ரவி (லண்டன்), ஜெயா (இத்தாலி), சிவா (லண்டன்) ஆகியோரின் மருமகனும் றஞ்சினி, றயனி, ரூபி, சசி, சுசி, கீதா, நளினி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.* (16342)

தகவல்
ம.பாலரதி
(தாய்)

## திருமதி
## லில்லி றெஜீனா பிரான்சிஸ் ஒவ் மேரி

இலக்கம் 8/1, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி லில்லி றெஜீனா பிரான்சிஸ் அவர்கள் நேற்று (03.04.2003) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரானஸிஸ் ஒவ் மேரி (இளைப்பாறிய ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் கரளைன் செல்வமணி, டெய்சி மாக்கிரட், விக்ரர் வேதரட்ணம், தோமஸ் ஞானரட்ணம், றூபி கொன்ஸ்ரன்ற், பேபி இசபெல்லா, அருட்சகோதரி றோஸ் புளோரன்ஸ், அம்புறோஸ் விஜயரட்ணம், வில்லியம் யோகரட்ணம், பயஸ் செல்வரட்ணம், இயேசுமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கிளிபேட் மற்றும் பிலோமினா (நேசமணி), காலஞ்சென்ற மகிழ்மணி மற்றும் விஜயவர்த்தன, லில்லி றோஸ், சாந்தி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலநாதன், எல்மோ, றோய், காலஞ்சென்ற மொறிஸ் மற்றும் மொறின், யூலியஸ், செறின், சந்திரிக்கா, அன்ரன், நெல்சியா, றொகான், லெனாட், விஜயா, குளோறியா, நோயல், றெபேக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஓவியா, திவ்வியன், நிடியா, நட்டாலியா, தேசன், நேயா, ரந்திக்கா, மெகான், சேன்யா, மினோன், கெவின், றொசேன், றொமேன், செனோன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லக்க ஆராதனை நாளை (05.04.2003) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8/1, புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (16350)

தகவல்:
விஜயரட்ணம் பிரான்சிஸ் (மகன்)
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

## திருமதி ஆறுமுகம் பறுவதம்

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா, பண்டாரிக் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் பறுவதம் 31.03.2003 திங்கட்கிழமை அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் அமரர் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் அமரர்களான பொன்னையா, தம்பிராசா, இராஜதுரை அவர்களினதும் சிவஞானம் (சமாதான நீதிவான்), தவமணி (பண்ணாகம்), யோகலட்சுமி (கொழும்பு), பாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கரத்தினம் (இணுவில்), பத்மாவதி (வவுனியா), அற்புதமேரி (கொழும்பு), செல்வம் (வவுனியா), அமரர் தியாகராசா (ஆசிரியர், பண்ணாகம்), திருச்செல்வம் (கொழும்பு), சர்வேஸ்வரி (கனடா) ஆகியோரின் மாமியும் சோதிப்பிள்ளையின் (சண்டிலிப்பாய்) சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.04.2003 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வவுனியா தட்சநாதன்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்ணாகம்,*
*சுழிபுரம்.* (16347)

தகவல்:
திருமதி தவமணி தியாகராசா
(மகள்)

## திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி நேற்று (03-04-2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பிரதம புகையிரத பாதுகாவலர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற செல்லப்பா தம்பதிகளின் (சுன்னாகம்) மருமகளும் காலஞ்சென்ற கணேசு, குழந்தைவேலு, பசுபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் க.முருகையா (கிராம அலுவலர்), Dr.க.இராஜேஸ்வரி (யாழ்.போதனா வைத்தியசாலை), ப.எழிற்செல்வி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற தங்கச்சியம்மா, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் அருந்தவமலரின் சிறிய தாயாரும் கேதனன் (மாணவன், பரியோவான் கல்லூரி), சுவேதனன் (மாணவன், பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2003) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இணுவில், காரைக்கால் இந்து மாயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க.முருகையா (மருமகன்)
(கிராம அலுவலர், கோண்டாவில் வ.மேற்கு J/115)

*இணுவில்.* (16338)

### சமாதான முயற்சிக்கு ஆதரவாக நடக்கும்

# வாஷிங்ரன் மாநாட்டில் இந்தியா பங்குபற்றுகிறது!

## அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு,ஏப்.4

இலங்கை அரசின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து இதுவரை இருந்துவந்த சந்தேகங்கள் நீங்கிவிட்டன. இதுவரை காலமும் எந்தவித பேச்சுக்களிலும் கலந்துகொள்ளாமல இருந்த இந்தியா முதன்முறையாக வாஷிங்ரனில் நடைபெறும் சமாதான ஆதரவு மாநாட்டில் கலந்துகொள்கின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அரசியல் விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுக்காலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஏப்ரல் 29 ஆம் திகதிமுதல் மே 2 ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெறும் ஏழாவது சுற்றுப் பேச்சுக்கு முன் ஏப்ரல் 14 ஆம் திகதி வாஷிங்ரனில் சமாதான ஆதரவு மாநாடு நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் நோர்வே, ஜப்பான, பிரிட்டன், ஐரோப்பிய யூனியன் நாடுகள் என்பன முக்கிய பங்கைவகிக்கின்றன. இந்த மாநாட்டில் இந்தியா நேரடியாகக் கலந்துகொள்ளும் என்றும் அமைச்சர் பீரிஸ் அங்கு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்தமுறை ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதான ஆதரவு மாநாட்டின் மூலம் எமக்குக் கிடைத்த உதவிகளுக்கும் மேலாக வாஷிங்ரன் மாநாட்டின் மூலம் கிடைக்கும்.

இப்படியான உதவிகள் எமக்கு ஒருபோதும் கிடைத்ததில்லை. இனிமேலும் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை. எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற வட அயர்லாந்து அரசியல் விற்பன்னர் ஜோன் கியூம் நேற்று முன்தினம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல் விவகார அமைச்சர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். நேற்று கிளிநொச்சிக்குச் சென்ற அவர் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தினார்.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஐ)

# வாஷிங்ரன் மாநாட்டுக்கு புலிகள் அழைக்கப்படாமை குறித்து விசனம்

கொழும்பு,ஏப்.4

ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னோடி நிகழ்வாக எதிர்வரும் 14ஆம் திகதி வாஷிங்ரனில் சமாதான ஆதரவு மாநாடு ஒன்று நடை பெறுகின்றது. ஆனால், அந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை.

அது குறித்து புலிகள் விசனமும் ஏமாற்றமும் அடைந்திருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் உயர் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப் புலிகளும் பங்குபெறவிருப்பதால் அந்த மாநாடு முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆனால்; அந்தக் கூட்டத்துக்கு முன்னோடியாக - முன் ஆயத்தமாக - நடைபெறும் வாஷிங்ரன் கூட்டத்துக்கு புலிகள் அழைக்கப்படவில்லை. இது எமக்கு அதிருப்தியையும், விசனத்தையும், ஏமாற்றத்தையும் தந்துள்ளது. ஜப்பானில் நடைபெறும் உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் நாங்கள் பங்குபற்றத்தான் வேண்டுமா என்பதை நாம் மீள ஒருதடவை பரிசீலிக்க வேண்டிய நிலையை இந்த நடவடிக்கை ஏற்படுத்தியுள்ளது. எம்மை ஓரங்கட்டுவதன் மூலம் அமெரிக்கா இந்த சமாதான முயற்சிகளுக்கு தங்கு விளைவிக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

- இப்படி அந்த வட்டாரங்கள் உதயனுக்கு கருத்து வெளியிட்டன.(ஐ)

# மானிப்பாயில் மின் தாக்கி மாணவன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,ஏப்.4

மானிப்பாய்ப் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் உயர்தர வகுப்பு மாணவர் ஒருவர் நேற்று பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்றுக்காலை 7 மணியளவில இடம்பெற்ற இச்சம்பவத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவரான மரிய தாஸ் பிரதீபன் (வயது18) என்பவரே மரணமானவராவார்.

வீட்டில் முதல்நாள் நிறுவப்பட்ட கொங்கிறீட் பிளாட் காய்வதற்காக தற்காலிக மின் இணைப்பு மூலம் மின் ஒளி வசதி செய்யப்பட்டிருந்தது. மறுநாள்காலை மின் இணைப்பைக் கழற்றுவதற்காக பிரஸ்தாப மாணவர் பிளாட் மீது ஏறியபோது அவரை மின் தாக்கியதாகக் கூறப்படுகின்றது. உடனடியாக அவரை ஆஸ்பத்திரிக்கு சென்றபோது வழியில் மரணமானார்.

மரணவிசாரணையின் பின்னர் சடலம் நேற்றுமாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-10-15-139)

## 1,000 தொண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடினர்.

வடக்கு - கிழக்கில் பணிபுரியும தொண்டர் ஆசிரியர்களுக்கு பரீட்சை எதுவும் நடத்தாமலேயே நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என்று கூட்டமைப்பினர் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இது விடயமாக கல்வியமைச்சருடன பேச்சு நடத்தும்படி பிரதமர் கூட்டமைப்பினரிடம் தெரிவித்து, அதற்கான ஏற்பாடுகளை நேரடியாக மேற்கொண்டார்.

அதற்கமைய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ்.தண்டாயுதபாணி, பொதுச் செயலாளர் த.மகாசிவம் ஆகியோரும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கை நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.


வடக்கு - கிழக்கில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களில் ஆயிரம் பேருக்கு பரீட்சை ஏதுமின்றி நியமனம் வழங்க கல்வியமைச்சர் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்தார்.

இந்த நியமனம் தொடர்பாக திறைசேரி அதிகாரிகளுடன் பேசவேண்டியுள்ளது என்றும் இறுதி முடிவை எதிர்வரும் 9 ஆம் திகதி தெரிவிப்பதாகவும் கல்வி அமைச்சர் தூதுக்குழுவிடம் தெரிவித்தார். (ஐ-3-12)

## பதில் உப தபாலதிபர்

நெடுந்தீவு கிழக்கு உப தபாலகத்துக்கு பதில் உப தபாலதிபராக திருமதி வரதராசா சந்திரதிலகம் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என நெடுந்தீவு தபாலதிபர் நா.தங்கராஜா அறிவித்துள்ளார்.


இதுவரை உபதபாலதிபராகக் கடமையாற்றிய வி.அமிர்தலிங்கம் உதவித் தபாலதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றதை அடுத்தே இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது. (எ)

ௐ

கணபதி துணை

அரி ஓம் நமோ நாராயணாய நம



திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபி(எவிவி)யுக சித்திரபானு வருட (5104) பங்குனித் திங்கள் 22ம் நாள் நாளை (05.04.2003) சனிக்கிழமை தெய்வேந்திர முகூர்த்தமான நண்பகல் 12.00 மணியளவில் "Z to Infinity IT Academy" என்ற கணினிக் கல்விக்கூடமும் "SRI SAKKARAH Computer Eye" என்னும் Computer Complex உம் எனது பெற்றோர்களான திரு.திருமதி. மு.தியாகராஜா அவர்களினால் மங்களகரமாக திறந்து வைப்பதற்கு திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் பெரியோர்கள், அன்பர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரும் வருகை தந்து விழாவினை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றார்.

Your's
T.SATHIENTHRA (KANNAN)
Proprietor
Sri Sakkarah Computer eye
&
Z to Infinity IT Academy

Mobile:- 0777-146945

e-mail:- tsathiyendra@yahoo.com
&
zia2631@hotmail.com

No: 7 1/4, 7 1/6, Upstairs Modern Market, Palaly Road, Thirunelvely Junction, Jaffna.


## ஆலயங்களுக்கு காசோலை

யாழ்ப்பாணம்,ஏப்.4

இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் குடாநாட்டில் உள்ள ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்களுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருக்கின்றது.

காசோலையை வழங்கும் இடம் நேரம் போன்ற விவரங்கள் நாளை அறிவிக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

காசோலை பெறும் ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்களின் விவரம் நாளைய உதயனில் வெளியாகும்.

## நகரில் இன்று யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள ஆக்கிரமிப்பு யுத்தத்தை நிறுத்துமாறு கோரி இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ்பஸ்நிலையப் பகுதியில எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெறவுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சமாதானத்தை விரும்பும் சகல பொதுமக்களையும், பொது அமைப்புக்களையும் கலந்துகொண்டு தமது கண்டனத்தை வெளிப்படுத்துமாறு அக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ-10)

## கொழும்புத்துறையில் புதிய வேலைத்திட்டங்கள்

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் 30 லட்சம் ரூபா செலவில் 5 வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார். (எ-180)

## இப்போது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு உரிய நேரம் இன்னமும் வரவில்லை என்பதையும் நாம் அவருக்குத் தெளிவாக எடுத்துரைத்திருந்தோம்.

ஆனால், அதற்குப் பின்னர் இப்போது எம்முடன் கலந்து பேசி இணக்கம் ஏதும் காணாமல் - ஒரு தலைப்பட்சமாக - சர்வஜன வாக்கெடுப்புப் பற்றிய அறிவிப்பை இலங்கை அரசுத் தரப்பு விடுத்திருப்பது எமக்கு வியப்பைத் தருகின்றது.

தமிழர்தரப்பு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படுவதை வரவேற்கும் நிலையில் இன்று இல்லை.

பத்து லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் நாட்டைவிட்டு புலம் பெயர்ந்துள்ளனர். நாட்டுக்குள்ளேயே மேலும் பல லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களெல்லாம் இத்தகைய சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றில பங்குகொள்ளும் நிலையில் இல்லை. அப்படி இருக்கையில் இத்தகைய சர்வஜன வாக்கெடுப்பு, எவ்வாறு நீதியான தீர்வைத் தரமுடியும்.

சர்வஜன வாக்கெடுப்பு என்ற பெயரில் பல கோடி ரூபாவை வீணாக்குவதை விடுத்து அந்த நிதியை இடம்பெயர்ந்த எமது மக்களின் நலனுக்கு செலவிடலாமே!

இனப்பிரச்சினைக்கு இறுதியான தீர்வு எதனையும் நாம் காணவில்லை.

அடிப்படை விடயங்கள் குறித்து ஆழமாக இன்னும் நாம் பேசக்கூடத் தொடங்கவில்லை. ஆக சமஷ்டிக் கட்டமைப்பின் பூர்வாங்க அடிப்படை குறித்தே ஓர் இணக்கம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த சமஷ்டி எத்தகையது? அதன் பரிமாணங்கள், கட்டமைப்புகள் எவை? அதன் அதிகார வரம்புகள், எல்லைகள், அலகுகள் எவையெவை? என்பன குறித்தெல்லாம் இன்னும் நாம் பேசத்தொடங்கக்கூடவில்லை. இந்த நிலையில் தீர்வு முயற்சி குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி நாம் என்ன காணப்போகின்றோம்? நாடாளுமன்றத் தேர்தல் பற்றிய புரளி ஒன்று தெற்கில் கிளம்பியுள்ளது. இது போன்ற அங்கு கிளம்பும் அரசியல் பூதங்களைச சமாளிப்பதற்கு நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு - சமாதான நடவடிக்கைகளின் போக்கை அதற்குப் பயன்படுத்துவது ஏற்கப்பட முடியாததாகும்.

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களும், புத்திஜீவிகளும் அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர். இவ்வாறு செய்வது ஒரு வகையில் அரசு மேற்கொண்டுவரும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக நாட்டு மக்களை நாடி பிடித்துப் பார்க்கும் ஒரு செயலாகவும அமையும். எனவே இந்த ஆலோசனையை அரசு பரிசீலனைசெய்துவருகின்றது - என்றும் அமைச்சர் கூறினார்.

எது எப்படியாயினும் அரசும் புலிகளும் மேற்கொண்டு வரும் பேச்சுகளின் இறுதித் தீர்மானம் சர்வஜன வாக்கெடுப்பின் மூலமே அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்படும். இதில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அமைச்சர் பீரிஸ் கூறினார். (ஐ)

## பேச்சின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி சமாதானத்திற்கும் இந்த அமைதி முயற்சிக்குமான ஒத்துழைப்புக்களை நாம் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றைய சந்திப்பு கூடுதலாக முன்னெடுக்கப்படுகின்ற சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும், தற்போதுள்ள களசூழ்நிலை தொடர்பாகவும் ஆராய்வதாக இருந்தது. ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தி மக்களுக்கு முழு அளவில் நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையில் அதை செயற்படுத்துவதன் ஊடாகவே சமாதானத்திற்கும், இந்த அமைதி முயற்சிக்குமான ஒத்துழைப்புகளை பெறமுடியும். இந்த சமாதான முயற்சிகளில் சர்வதேசத்தை இணைத்துச்செல்வதற்கும் அதுவே உதவிக்கரமாக அமையும். தற்போது உயர் பாதுகாப்பு வலயம், பாதுகாப்பு வலயங்கள் என்று மக்கள் மீளக்குடியேற முடியாமல் இருக்கின்ற காரணிகள் இன்னும் இயல்பு நிலை தோன்றாமல் இருப்பது என்பன இன்றைய சமாதான முன்னெடுப்புக்களுக்கு ஒரு நெருக்கடிச்சூழ்நிலையைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

ஏற்கனவே எட்டப்பட்ட உடன்பாடுகளையும் ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையையும் முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம்தான் இனி பேச்சுக்களில் முன்னேற்றங்களை ஏற்படுத்தலாம் - என்று தெரிவித்தார் தமிழ்ச்செல்வன்.

வட அயர்லாந்து நாட்டவரான ஜோன்கியூம் அங்கு தெரிவித்ததாவது:-

நான் ஸ்ரீலங்கா அரசின் அழைப்பின் பேரிலேயே இங்கு வருகை தந்தேன். அத்துடன் இன்றைய சந்திப்பின் மூலம் வட அயர்லாந்தின் சமாதான அனுபவங்களை பகிர்ந்துகொண்டேன். அல்லலுறும் மக்களுக்கு உறுதியான சமாதானத்தை பெற்றுக்கொடுக்க அனைவரும் பாடுபடவேண்டும். அதே வேளை சமாதான வழிமுறை மூலம் எப்படிப்பட்ட பகைமை உணர்வையும் முடிவுக்கு கொண்டுவர முடியும் என்பதை அனைவரும் மிகத்தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். வன்முறைகளை முற்றாக தவிர்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிம்மதியான சமாதானத்தை நிலைநாட்ட உறுதியான போக்கை கடைப்பிடிக்க வேண்டும். தற்போதைய சமாதான நடைமுறைகளை நோக்கும் போது தமிழழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு வரவேற்கக் கூடிய நிலையில் உள்ளதோடு போர் நிறுத்த நடைமுறைகளில் முறையான போக்கை கடைப்பிடிப்பதாக உணர முடிகிறது - என்றார்.

இக்கலந்துரையாடலை அடுத்து குழுவினர் சேதமடைந்த கிளிநொச்சி மத்திய கல்லூரி, ஆஸ்பத்திரி ஆகியவற்றை பார்வையிட்டனர். புதிய வைத்தியசாலைக் கட்டடத்துக்கு அடிக்கல் நடப்பட்ட இடத்தையும் குழுவினர் சென்று பார்த்தனர். பிற்பகல் 2.30 மணிக்கு அவர்கள் கொழும்பு திரும்பினர். (ஐ-3)


## புத்தாண்டை முன்னிட்டு மலிவு விற்பனை

தச்சுவேலை செய்யும் 10", 12", 14", 16" சைனா மெசின்கள் (China), வெல்டிங் பிளான்ற், றில்லர்கள், ஜெனரேற்றர்கள், ஏனைய எலக்ரிக் சாமான்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

கி.சுதாகரன்
இல.20, 2ஆம் ஒழுங்கை, அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(16317)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.